இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதம் இரு இதழ் — 453 ● 1994 அக்டோபர் 14 வெள்ளிக்கிழமை

**பகிரங்க விரிவுரை**

**பொது சன முன்னணி அரசாங்கத்தின் கீழ் தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுக்கும் ஆபத்துக்கள்**

★ அக். 07 பி.ப 3 : சிலாபம் மல்புர பிரஜா சாலை

★ அக். 09 பி.ப 3 : களுத்துறை சிறுவர் நூல் நிலையம்

★ அக். 09 பி.ப 3 : பண்டாரவளை நகர மண்டபம்

★ அக். 18 பி.ப 3 : அட்டன் நகர மண்டபம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் / இளம் சோசலிஸ்டுகள்

## பியகம சுதந்திரவர்த்தக வலய பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம்

# சுயாதீன தொழிலாளர் விசாரணை ஆரம்பம்

RECEIVED

முதலாளித்துவ பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் செப்டம்பர் 5ம் திகதி பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழிலாளர்கள் மீது இடம்பெற்ற பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய சுயாதீன தொழிலாளர் விசாரணைக்கான ஆயத்தங்கள் இடம் பெற்று வருகின்றன.

இந்த விசாரணை, 1993ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டியினால் நடாத்தப்படும், இக்கமிட்டி 1993 ஜூனில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் கொரியா– சிலோன் கம்பனியின் பழுதடைந்த இயந்திரத்தில் பலவந்தமாக சேவைக்கு அமர்த்தப்பட்டதால் இறந்த பிரேமலால் ஜயக்கொடி என்ற தொழிலாளியின் மரணம், சு. வ. வ, நிலைமைகளை ஆய்வதுடன் தனது பணியை ஆரம்பித்தது,

பியகம சு.வ.வ. துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய சுயாதீன தொழிலாளர் விசாரணையை நடாத்தும் முக்கிய தீர்மானத்தை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எடுத்ததற்கு காரணங்கள் பல. குறிப்பாக சு.வ,வ. தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் எதிரில் தோன்றியுள்ள ஆபத்துக்களை கருத்தில் கொண்டே இதனை ஆரம்பித்துள்ளோம். முதலாளித்துவ அரசாங்கமும் முதலாளித்துவ ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் அவற்றின் கைக்கூலிகளான நானாவித அரசியல், தொழிற்சங்க அமைப்புக்களும், முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் பியகம பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தையும் அதன் நிஜ எதிர்பார்ப்புக்களையும் பூசி மெழுகவும் தொழிலாளர்கள் மேல் பழியை சுமத்தவும் அணிதிரண்டுள்ளன, இத்தகைய ஒரு நிலையில் நிஜ குற்றவாளிகள் யார்? அவர்களின் சகபாடிகள் யார்? அவர்களின் பிற்போக்கு இலக்குகள் என்ன? என்பவற்றை தொழிலாளர் தமது சுயாதீன தொழிலாளர் விசாரணை மூலம் அம்பலப்படுத்த வேண்டியுள்ளது.


### விசாரணைக்கு ஆதரவு

சுயாதீன தொழிலாளர் விசாரணை பற்றிய அறிவித்தல் வெளியானதும் அதற்கு ஆதரவு தெரிவித்தும், பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தை கண்டித்தும் தொழிலாளர்கள், தொழிற் சங்க அமைப்புக்களிடமிருந்து எமக்கு அறிக்கைகள் கிடைத்து வருகின்றன, துப்பாக்கிப் பிரயோகத்துக்கு உள்ளான தொழிலாளி கடமை புரிந்த அன்சல் லங்கா கம்பனியின் ஒரு தொழிலாளி கமிட்டிக்கு தனது கருத்துக்களை தெரிவிக்கையில் கூறியதாவது:

''அத்தகைய ஒரு விசாரணை இடம் பெறுமானால் எனது முழு ஆதரவும் அதற்கு கிடைக்கும். இது சம்பந்தமாக விசாரணை நடாத்துவதாக அரசாங்கம் கூறியது. ஆனால் இன்னமும் அதைப்பற்றி எது விதமான பேச்சும் இல்லை... அரசாங்கத்தின் விசாரணைகளால் தொழிலாளர்களுக்கு எதுவிதமான நன்மையும் கிடையாது. எமது போராட்டத்துக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்த அரசாங்கம் கடந்த சில தினங்களாக பத்திரிகைகளில் பொய் அறிக்கைகளை வெளியிட்டுள்ளது'. இத்தொழிலாளி தனது சகோதர தொழிலாளர்களின் உள்ளக் கிடக்கைகளையே வெளிப்படுத்தினார். தொழிலாளர் உண்மையை அறிந்தாக வேண்டும்,

துப்பாக்கி பிரயோகத்தினை கண்டனம் செய்து அறிக்கை

(8–ஆம் பக்கம் பார்க்க)



பொலிஸ் துப்பாக்கி ரவைகள் துழைத்த நிலையில் உயிர் ஊசலாடிக் கொண்டுள்ள தொழிலாளி கே. பிரேமரத்ன

## இந்தியாவில் கொள்ளை நோய்:

# முதலாளித்துவத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் பெறுபேறு

கொள்ளை நோய் (பிளேக்) இந்தியாவினுள் மீண்டும் தலைதூக்கி உள்ளதன் மூலம் முதலாளித்துவ 'திறந்த பொருளாதாரக்கொள்கை'' யின் கீழ் தொழிலாளர் -ஒடுக்கப்படும் மக்களுக்கு கிட்டும் பயங்கர தலைவிதிக்கு புதிய எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

இதுவரை வெளிவந்துள்ள செய்திகளின்படி குஜராத், மஹாராஷ்டிரா, உத்தர பிரதேசம் உட்பட்ட 11 மாநிலங்களில் கொள்ளை நோய் பரவியுள்ளது. இதில் தலைநகர் புதுடில்லியும் அடங்கும். குஜராத்திலும் மகாராஷ்டிராவிலும் இந்நோய் கடுமையாகப் பரவியுள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்த நோய் பரவுவதற்கான அறிகுறிகள் செப்டம்பர் தொடக்கத்தில் இருந்து காணப்பட்டு வந்துள்ள போதிலும் அது பரந்த அளவில் வெடிக்கும் வரை மத்திய, மாநில அரசாங்கங்கள் அதைக் கணக்கெடுக்கவில்லை.

இந்திய அரசாங்கப் புள்ளி விபரங்களின்படி அக்டோபர் 5ம் திகதியளவில் கொள்ளை நோய் பீடிக்கப்பட்ட 4200 பேர் இந்தியாவின் பல்வேறு பிராந்தியங்களிலும் கண்டு பிடிக்கப்பட்டதோடு குறைந்தது 51பேர் இறந்தனர். செப்டம்பர் 30 ம் திகதி மஹாராஷ்டிராவில் 1190 நோயாளிகளும் குஜராத்தில் 953 நோயாளிகளும் கண்டு பிடிக்கப்பட்டனர். அன்றைய தினம் குஜராத்தின் சுராத் நகரில் இறந்தவர்களின் எண்ணிக்கை 41 என அறிவிக்கப் பட்டது.

முதலில் எலிகளுக்கும் (மற்றும் பிராணிகளுக்கும்) தொற்றும் தெள்ளின் மூலம் பரவுவதாகக் கொள்ளப்படும் இந் நோயை தடுப்பதற்கான மருந்துத் திரவியங்களும், கருவிகளும் பாதுகாப்பான நிலைமைகளும் இந்தியாவில் அரிதாகவே உள்ளது, இந்நிலையில் குஜராத்திலும், மகாராஷ்டிராவிலும் குழம்பிப் போன பல டாக்டர்களும் மருத்துவ ஊழியர்களும் வேறிடங்களுக்கு தப்பி ஓடியுள்ளனர். குஜராத்தில் இருந்து வெளியேறியுள்ள மக்களின் எண்ணிக்கை 3 லட்சத்துக்கும் அதிகம் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. சுராத் நகரில் அரசாங்க ஆஸ்பத்திரியில் நோயாளிக்கு சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டிருந்த டாக்டரையும் இந்நோய் உடன் பீடித்துக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வறுமையினால் பீடிக்கப் பட்டுள்ளதும் மக்களின் சுகாதார நிலைமை தகர்ந்து போயுள்ளதுமான இந்தியாவில் தொற்று நோயினால் பீடிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கையும் அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளின் அகோரமும் இதைக் காட்டிலும் கடுமையானதாக இருக்க வேண்டும். ஆனால் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களின் முதலீடுகளை இந்தியாவினுள் இழுப்பதற்கு இவை பற்றிய உண்மைச் செய்திகளை வெளியிடுவது தடையாகிப் போய் விடலாம் என நரசிம்மராவ் அரசாங்கம் எண்ணுவது நிச்சயம்.

இந்தப் பயங்கர நோய் பரந்து கொண்டு வருகையில் நோயாளிகளுக்குக் கொடுப்பதற்கு அவசியமான 'டெட்ராசயிக்கிளின்', 'ஸ்ரெப்ரோமைசின்' உட்பட்ட ஊசி மருந்துகளோ, குளிசைகளோ இந்தியாவினுள் போதிய அளவு இருக்கவில்லை. முதலாளித்துவ 'த ஹிந்து' பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியின் படி பொதுச் சந்தையில் ரூபா10/ஆக விற்பனைசெய்ய

( 8ம் பக்கம் பார்க்க )

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பு.க.க.வை அங்கீகரிக்க மறுத்ததை எதிர்த்து அடிப்படை உரிமைகள் மனு விசாரணைக்கு வருகிறது

தேர்தல் ஆணையாளர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை தேர்தல் கருமங்களுக்கான ஒரு அரசியல் கட்சியாக அங்கீகரிக்க மறுத்ததை எதிர்த்து அதன் பொதுச் செயலாளர் தோழர். விஜே டயசினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மனுவின் மீதான விசாரணை அக்டோபர் 17ம் திகதி உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மூவர் முன்னிலையில் விசாரணைக்கு வருகின்றது.

பு.க.க. இந்த மனுவை அரசியலமைப்பு சட்டததின் 12ம் இலக்கத்தின் பின்வரும் பிரிவுக்கு அமையத் தாக்கல் செய்துள்ளது: "12 (1) சகல நபர்களும் சட்டத்தின் எதிரில் சமானமானவர்கள், சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பை பெற உரித்துடையவர்கள். (2) இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கருத்துக்களின் மேல் எந்தவொரு தனிநபருக்கும் வேறுபாடு காட்டப்படக் கூடாது."

முதலாளித்துவ அரசின் தேர்தல் ஆணையாளர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொடர்பாக மேற்குறிப்பிட்ட உரிமைகளை மீறியுள்ளதாயும், அந்த உரிமைகளை ஊர்ஜிதம் செய்யும் படியும் இம்மனு கோருவதோடு பு.க.க.வுக்கு ரூபா 250,000/- நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த மீறல்கள் உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்தின் ஜனநாயகம் முதலாளி வர்க்கத்துக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது. பு.க.த.வை ஒரு அரசியல் கட்சியாக அங்கீகரிக்கும்படி இதற்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பங்களும் தேர்தல் ஆணையாளரால் பலதடவை நிராகரிக்கப்பட்டுள்ளன. தாம ஒரு அரசியல் கட்சி மட்டுமன்றி தேர்தல் கருமங்களுக்காக அணிதிரண்டதையும் உறுதி செய்யும் தஸ்தாவேசுக்களையும் படங்களையும் உள்ளடக்கிய ஆதாரங்களை பு.க.க. தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பித்த போதிலும். ஆணையாளர் அவற்றை ஆய்வு செய்ய மறுத்ததாயும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தஸ்தாவேசுக்கள் பு. க. க. வின் 26 வருடகால நீண்ட அரசியல் போராட்டத்தினை நிரூபிப்பவையாக உள்ளன.

1968ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையாக நிறுவப்பட்ட பு.க.க. அன்றிலிருந்து பத்திரிகைகளை அச்சிட்டும், புத்தகங்கள் பிரசுரங்களை வெளியிட்டும் தொழிற் சங்கங்களுள் தலையிட்டும் வந்ததோடு தொழிலாளர் விசாரணை ஆணைக்குழுக்கள், தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்கள் மூலம் அனைத்துலக சோசலிச அரசியல் விதிமுறைக்காக போராடி வந்தது. தேசிய ரீதியிலும் அனைத்துலக ரீதியிலும் முக்கியமான சகல பிரச்சினைகளிலும் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனமான நிலைப்பாட்டை முன்வைத்து தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே ஒரு புரட்சிகரத் தலைமையைக் கட்டி எழுப்பப் போராடியது.

1968ல் இருந்து பு.க.க. 'தொழிலாளர் செய்தி' 'கம்கறு புவத்' பத்திரிகைகளை வெளியிட்டு வந்தது. 1971ல் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தினால் இந்த பத்திரிகைகள் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1972ல் 'தொழிலாளர் பாதை', 'கம்கறு மாவத்த' பத்திரிகைகளை வெளியிட்டு வந்தது. இத்தோடு 'தருணசட்டன்' 'தருண சமாஜவாதியா' 'இளம் சோசலிஸ்ட்' போன்ற பத்திரிகைகள் பு.க.க.வின் இளைஞர் இயக்கத்தினால் வெளியிடப்பட்டன. 1071ல் பு. க. க. பத்திரிகைகள் அனைத்தும் தடை செய்யப்பட்ட ஒரு நிலையிலும் தமது பத்திரிகைகளையும் பிரசுரங்களையும் தொழிலாளர் வர்க்கத்தினுள் எடுத்துச் செல்வதில் பு. க, க. வெற்றிகண்டது,

1965—70 முதலாளித்துவ யூ. என்.பி.க்கும் 1970—77ல் முதலாளித்துவ சி.ல,சு க. கூட்டரசாங்கத்துக்கும் அதைத்தொடர்ந்து 17 வருடகால யூ. என். பி. ஆட்சிக்கு எதிராகவும் ஜே. வீ.பி. வடிவில் தலைநீட்டிய பாசிச அச்சுறுத்தல்களுக்கும் எதிராக தொழிலாளர் வர்க்கத்தினை சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்ட பு.க.க. இடைவிடாது போராடியது அத்தோடு தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, தமிழ் தேசிய இனத்தினரின் ஜனநாயக உரிமைகள் கிராமப்புற ஏழைகளின் ஜனநாயக உரிமைகளையும் காப்பதற்கு தொழிலாளர் வர்க்கத்தை ஈடுபடுத்த பு.க.க. போராடியது.

வடக்கு—கிழக்கு தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக சிங்கள முதலாளித்துவ ஆட்சி நடாத்திய இனவாத யுத்தத்துக்கு எதிராக மட்டுமன்றி கொழும்பு முதலாளித்துவ ஆட்சியின் ஆயுதப்படைகளை வடக்கு—கிழக்கில் இருந்து வாபஸ் பெற தொழிலாளர் வர்க்கத்தினை அணிதிரட்டப் போராடியது. இலவசக் கல்வி, இலவச சுகாதார சேவை உட்பட்ட சமூக நலன்புரி சேவைகளை காக்க பு. க. க. நடாத்திய போராட்டம் அதன் போராட்டத்தின் ஒரு முக்கிய அத்தியாயமாக விளங்கியது.

1968ல் இருந்து உக்கிரம் கண்டு வந்த உலக முதலாளித்துவத்தின் நெருக்கடியை தெளிவுபடுத்தப் போராடிய பு. க. க. தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரங்களை மற்றும் ஒடுக்கப்படும் மக்களை காக்கும் ஒரு சோசலிச வேலைத்திட்டத்திற்கான போராட்டத்தின் மூலம் மட்டுமே பேண முடியும் எனச் சுட்டிக்காட்டியது. தொழிலாளர் வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்ற தொழிலாளர்களின் நடவடிக்கைக் குழுக்கள், சோவியத் சபைகளின் முக்கியத்துவத்தினையும் அது இடைவிடாது வலியுறுத்தி வந்தது. இதற்கு சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டியெழுப்புவதை மையப் பிரச்சினையாகக் கொண்டு பு.க.க. போராடியது.

இதற்கு முன்னர் 1973, 1975, 1977ம் ஆண்டுகளில் பு.க.க. பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டது. 1982ல் நடைபெற்ற கொழும்பு மாநகர சபைத் தேர்தலிலும் பு. க. க. தனது வேட்பாளர்களை நிறுத்தியது.

இந்தப் போராட்டத்தின் மத்தியில் ஆளும் வர்க்கத்தினரால் ஆறு பு.க.க. உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டனர். லக்ஷ்மன் வீரக்கோன், எல். ஜீ. குணதாச 1971ல் சிறிமாவோபண்டாரநாயக்க கூட்டரசாங்கத்தினாலும், ஆர். பி. பியதாச 1979ல் யூ. என். பி, அரசாங்கத்தினாலும், ஆர், ஏ. பிட்டவெல பீ. எச். குணபால, கிரேஷன் கீகியனகே ஜே. வீ.பி. பாசிசக் குண்டர்களாலும் கொலை செய்யப்பட்டனர், பு. க. க. தலைமையின் கீர்த்தி பாலசூரிய, விஜே டயஸ் போன்ற தோழர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். பல தருணங்களில் பு.க.க வின் தலைமை அலுவலகம் பொலிஸ், இராணுவ பாய்ச்சலுக்கு இலக்காகியது.

அரசியல் கட்சி என்பது தமது கருத்துக்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அரசியல் அதிகாரத்தை கைவரப்பெற ஒன்றிணைந்து போராடும், தனியாட்களின் அமைப்பு, இதுவே அங்கீகரிக்கப்பட்ட வரைவிலக்கணமாகும். இந்த வரைவிலக்கணத்தின்படி பு க.க. ஒரு அரசியல் கட்சி என்பதை ஒரு போதும் நிராகரிக்க முடியாது. ஆனால் அதை அங்கீகரிக்க மறுக்கும் அதே வேளையில் தேர்தல் ஆணையாளர் சமீபத்தில் திணிக்கப்பட்ட சிங்கள பூமி புத்திர கட்சி, வெகுஜன சுதந்திர முன்னணி போன்ற பாசிச வகையறாவைச் சேர்ந்த அமைப்புக்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் இந்த பக்கச் சார்பான மனப்பான்மை முதலாளித்துவ அரசியலமைப்பில் உள்ள 'சம உரிமை' பற்றிய சரத்து முழுமனே மோசடியானது என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது. முதலாளித்துவ ஜனநாயகம் அதன் வர்க்கத்தின் உபயோகத்துக்கு துணைபோகும் அளவுக்கு மட்டுமே. தேர்தல் ஆணையாளர் முதலாளி வர்க்கத்தின் விசுவாசமான வேட்டை நாயாக செயற்பட்டுள்ளார்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்திய போராட்டம் தொழிலாளர் வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்துக்கான அதன் நீண்டதும் உறுதியானதுமான தன்மையையிட்டு முதலாளி வர்க்கம் கிலியடைந்துள்ளது. மறுபுறத்தில் மேலே குறிப்பிட்ட பாசிச—இனவாத அமைப்புக்கள் அமைக்கப்பட்டு சொற்ப காலமாயினும் தேர்தல் ஆணையாளர் அவற்றை பேரன்புடன் அங்கீகரித்துள்ளார். அவை முதலாளி வர்க்கத்தின் கருவிகளாக இருப்பதே காரணம்.

இந்நிலைமையினுள் இப்பிரச்சினையை நீதிமன்றத்தின் முன்கொணரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இன்றைய சட்டத்தின் கீழ் அதற்கு உரிய உரிமையை உறுதி செய்யப் போராடும் அதே வேளையில் ஜனநாயக உரிமைகள் மீறப்படுவதன் பின்னணியில் உள்ள நிஜ நிலைமைகளை தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்கு புரிய வைக்கச் செயற்படும், இந்த இலக்குடன் தேர்தல் ஆணையாளரின் தீர்மானத்துக்கு எதிரான பெட்டிசத்தின் மூலம் கையெழுத்துச் சேகரிக்கும் இயக்கம் ஒன்றையும் பு.க.க. ஆரம்பித்து வைத்துள்ளது. ஏற்கனவே இதில் ஆயிரக் கணக்கானோர் ஒப்பமிட்டுள்ளனர்.

தொழிலாளர் புரட்சிக் கட்சி முதலாளித்துவ அமைப்பின் கீழ் ஜனநாயக உரிமைகளைப் பெறுவது என்பது தொழிலாளர் வர்க்கத்தினை நனவு பெறச் செய்து அணிதிரட்டும் அளவுக்கு மட்டுமே.

★


சோசலிச புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!

பெயர் ..............................................................

முகவரி: ..............................................................

..............................................................

..............................................................

தொலைபேசி இலக்கம்: ..............................

இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல: 90, 1வது மாளிகாகத்தை ஒழுங்கை,
கொழும்பு - 10,



வாசியுங்கள்!

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையின் ட்றொட்ஸ்கிச சஞ்சிகை

## மார்க்சிச முன்னோக்கு




தொடர்பு: ஆனந்த வக்கும்புர
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு – 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை — கம்மடுவ

# நீலச் சட்டைக் குண்டர்கள் தோட்டத் தொழிலாளர்களை தாக்கினர்

நந்த விக்கிரமசிங்க

கடந்த தேர்தல் முடிவுகள் வெளிவந்து ஒருவார காலம் கழியுமுன்னர், ரத்தோட்டை பிரதேச ஓபல்கல 'பிரே' தோட்டத்தில் பாய்ந்த பொதுசன முன்னணி ஆதரவு இனவாத கும்பல் ஒன்று ''தமிழா வெளியேறு! இல்லையேல் வெட்டிக் கொல்லுவோம்'' என்று கூச்சலிட்டபடி அத்தோட்டத்திலிருந்த மூன்று தொழிலாளர் குடும்பங்களை அடித்தும் சுட்டும் விரட்டியடித்துள்ளது.

பலநாட்கள் மாத்தளை முத்துமாரியம்மன் கோயிலில் தஞ்சம் புகுந்திருந்த இத்தொழிலாளர்கள் தற்சமயம் புகலிடமற்று ரத்தோட்டை நிகலோவ் தோட்டத்தின் பாழடைந்த லயன் காம்பரா இரண்டில் அடைபட்டு சீவிக்கின்றனர். ஒரு மாத காலம் மட்டுமே இங்கு தங்க அனுமதி கிடைத்துள்ளது. இந்த இடத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டால் என்ன செய்வது என்ற விரத்தியுற்ற நிலையில் இவர்கள் உள்ளனர், நீண்ட காலமாக வாழ்ந்து, தொழில் புரிந்து வந்த இடங்களிலிருந்தும் வெளியே விரட்டியடிக்கபட்ட இவர்கள் சீவிப்பது எப்படி என்று அங்கலாய்க்கின்றனர். தமது தொழில்கள் எப்படியும் கிடைக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர். எனினும் முதலாளித்துவ ஆட்சியின் பங்காளிகளாக உள்ள தொண்டமான் உட்பட்ட தொழிற்சங்கத் தலைமைகள் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணத் தயாரில்லை.



மாத்தளை - பிரே தோட்டத்தில் தாக்கப்பட்ட தொழிலாளர்கள்

பிரே தோட்டத்தில் இருந்து விரட்டப்பட்டு அடைக்கலம் தேடியுள்ள நிகொலவ் தோட்டம் ரத்தோட்டை நகரிலிருந்து ஆறு மைல்களுக்கு அப்பால் உள்ளது. ரத்தோட்டையிலிருந்து மதவத்த செல்லும் பஸ்ஸில் சென்று இடையில் இறங்கி, இருமைல் வரை நடந்து சென்ற பின் 'தொழிலாளர் பாதை' 'கம்கறுமாவத்தை' நிருபர்களால் இந்த தொழிலாளரை சந்திக்க முடிந்தது.

எமது நிருபர்களை சந்தித்த லெட்சுமி (50) மனோன்மணி (35) ஆனந்தம்மா (50) ஜக்கம்மா (50) கார்மேகம் (55) என்ற இந்த பெண் ஆண் தொழிலாளர்கள் கடந்த ஆகஸ்டு 22ம் திகதி பொது ஜன முன்னணி ஆதரவு குண்டர்கள் தம்மை தாக்கியமை பற்றி பின்வருமாறு விபரித்தனர்,

''லெட்சுமி உள்ளடங்களான ஆறேழு பேர் ஆகஸ்ட் 22ம் திகதி தோட்ட உரிமையாளர் ரொபட் சில்வாவின் பங்களாவில் தங்கியிருந்தனர். அச்சமயம் வீட்டின் உரிமையாளர் இருக்கவில்லை. இரவு 8,45 மணியளவில் பங்களா கதவு தட்டப்பட்டு இரு குண்டர்கள் உள்ளே நுழைந்தனர். உள்ளே வந்த இருவர் தாம் வேட்டைக்கு வந்ததாகவும் தமது குழுவில் பன்னிரண்டு பேர் வரை உள்ளனரென்றும் அவர்கள் வெளியே நிற்பதா

( 7ம் பக்கம் பார்க்க )

# 'ஒழுங்கு', 'மனிதாபிமான உதவி' கூச்சலின் பின்னணியில் ஹெயிட்டியில் 15000 அமெரிக்கப் படைகள் தரையிறங்கின

ஹெயிட்டியில் தரையிறங்கியுள்ள 15,000 அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் வழக்கம் போலவே 'ஒழுங்கை நிலைநாட்டி' 'மனிதாபிமான உதவி' வழங்கவே அங்கு சென்றுள்ளதாக கிளின்டன் நிர்வாகம் கூறிக் கொண்டுள்ளது,

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை, படைகள் ஹெயிட்டியில் இருந்து விரைவில் வாபஸ் பெறப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ள போதிலும், அமெரிக்கப் படைகளுக்கான செலவு 50–60 கோடி டாலர்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1996 பெப்ரவரி வரை அமெரிக்கத் துருப்புக்கள் ஹெயிட்டியில் நிலை கொண்டிருக்கும் என்ற அடிப்படையிலேயே கணக்கிடப்பட்டுள்ளது.

ஜூலை 31ம் திகதி ஐ. நா பாதுகாப்புச் சபை ஹெயிட்டி தீவினுள் அமெரிக்க இராணுவத் தலையீட்டுக்கு அதிகாரம் வழங்கியது. இது இந்த கரீபியன் தீவின் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு திசையில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். இந்த ஏழை நாட்டின் மீது அமெரிக்க முதலாளித்துவத்தின் பிடியையிறுகச் செய்யும் முயற்சி ''ஜனநாயகத்தை புனருத்தாரணம்'' செய்யும் நடவடிக்கையாகக் காட்டப்பட்டு வருகின்றது.

எவ்வாறெனினும் இந்த இருபதாம் நூற்றாண்டு சம்பவங்கள் அமெரிக்க ஆளும் வர்க்கத்துக்கு ஹெயிட்டி மக்களின் நலனில் எந்தவிதமான அக்கறையுமே கிடையாது என்பதை எடுத்துக் காட்டியுள்ளது. 1915—1934வரை அமெரிக்கப் படைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. அத்தோடு அமெரிக்க அரசாங்கம் அதன் நிதிகளையும் அரசியல் நிர்வாகத்தையும் நேரடியாக கட்டுப்படுத்தி வந்தது. 1957-1986 வரை அமெரிக்கா செல்வாக்கிழந்த 'பப்பா டொக்' 'பேபி டொக்' என்ற இரட்டைச் சர்வாதிகாரிகளை தூண்டிவிட்டுக் கொண்டிருந்தது. 1991ல் இடம் பெற்ற ஒரு இராணுவச் சதி மூலம் ஜனாதிபதி ஜீன் பேட்ரண்ட் அரிஸ்ரைட் பதவி கவிழ்க்கப்பட்டதில் இருந்து 5000 மக்களைக் கொலை செய்த ஹெயிட்டி இராணுவம் வாஷிங்டனால் நிறுவப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு, நிதியீட்டம் செய்யப்பட்டது. அமெரிக்க மேலாதிக்கத்தின் பெறு பேறு என்ன? ஹெயிட்டி ஒரு வறிய நாடாகியது தான்.

அமெரிக்க அரசாங்கம் ஹெயிட்டியில் கணிசமான அளவு பொருளாதார நலன்களைக் கொண்டுள்ளது. அந்நாட்டின் வெளிநாட்டு முதலீடுகளில் அமெரிக்கா 92 வீதத்தைக் கொண்டுள்ளது. வாஷிங்டனின் அரசியல் கணிப்பீடுகளின் அடிப்படையாக இருப்பது ஹெயிட்டியை ஒரு குறைந்த கூலி மேடையாக வைத்திருப்பதுவே. ஜெனரல் எலக்ரிக்கல்ஸ், சியர்ஸ் போன்ற இராட்சத அமெரிக்கக் கூட்டுத்தாபனங்கள் அடிமை உழைப்புச் சம்பளத்தின் மூலமும் (ஒரு மணித்தியாலத்துக்கு 14 அமெரிக்க சதங்கள்) ஹெயிட்டியில் நிலவும் ஜனநாயக உரிமைகள் இன்மையாலும் பெரும் இலாபம் சம்பாதித்தன.

அமெரிக்க ஆளும் வர்க்கத்தினரிடையே ஹெயிட்டி மீதான ஆக்கிரமிப்புத் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிளவு ஒரு உபாய ரீதியான பிளவாகும். ஆக்கிரமிப்பை ஆதரிப்பவர்களும் சரி எதிர்ப்பவர்களும் சரி இன்று ஹெயிட்டியில் ஒரு பெரும் ஆக்கிரமிப்புச் செய்து அரிஸ்ரைட்டை ஜனாதிபதி ஆக்குதவன் மூலம் அமெரிக்க முதலாளித்துவ நலன்கள் நன்கு பேணப்பட முடியுமா இல்லையா என்பதிலேயே முரண்படுகின்றார்கள்.

ஹெயிட்டியின் இராணுவ அதிகார சபையை அகற்றுவது, ஹெயிட்டிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முதற்படியாகும் என்ற அடிப்படையில் அமெரிக்க இராணுவத் தலையீட்டை ஆதரிப்போர் அடிப்படையான பிரச்சினைகளைப் புறக்கணித்து விடுகின்றனர். [illegible] ராசும் அவரின் கைக்கூலிகளும் கொலைகாரக் குண்டர்கள் ஆவர், இவர்கள் ஹெயிட்டி முதலாளித்துவத்தைப் பேணும் இன்னொரு இராணுவ அல்லது சிவிலியன் ஆட்சியினால் பதிலீடு செய்யப்படலாம். ஆனால் மக்களைப் பொறுத்தமட்டில் நிலைமையில் எதுவித மாற்றமும் ஏற்பட்டு விடாது. அமெரிக்காவும், யப்பானும், ஐரோப்பாவும் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும், லத்தின் அமெரிக்காவிலும் நேரடிக் காலனித்துவ ஆட்சிமுறையை நிறுவ முயன்று வந்துள்ளன. இன்றைய தருணத்தில் அமெரிக்காவின் அல்லது ஐக்கிய நாடுகளின் 'அமைதிகாக்கும் படை' ஈராக், சோமாலியா, பொஸ்னியா, மசிடோனியா, கம்போடியா, ருவண்டா முதலான நாடுகளில் இருந்து வருகின்றது.

ஒரு சர்வாதிகாரியை அகற்றுவதன் மூலம் மக்களின் துயரங்களுக்கு முடிவுகட்டவும் ஜனநாயகத்தை புனருத்தாரணம் செய்யவும் வழி பிறக்கும் என்ற வரட்டு வாதங்கள் ஹெயிட்டியைப் பொறுத்த மட்டில் நாற்றம்கண்டுள்ளன. இதே வாதங்கள் 1989ல் பனாமா 1990—91ல் ஈராக் 1992—93ல் சோமாலிய ஆக்கிரமிப்புக்களை நியாயப்படுத்த இடம்பெற்றன. இன்று ஹெயிட்டிய மக்களின் முன்னால் உள்ள தெரிவு இன்றைய கொலைகார ஆட்சியை ஏற்பதா அல்லது ஒரு அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு அடிபணிந்து போவதா என்பது அல்ல. ஆனால் உண்மையில் இந்த 'தெரிவு' ஒரு நிஜ தெரிவு அல்ல. இந்த முட்டுச் சுவர்களுக்கு ஹெயிட்டி மக்களை இட்டுச் சென்றவர்கள் யார்? 1991 செப்டம்பரில் ஹெயிட்டிய ஜனாதிபதி அரிஸ்ரைட் தூக்கிவீசப்பட்டதில் இருந்து அவன் ஹெயிட்டிய மக்கள் அணிதிரளாதிருக்கும் பொருட்டு தன்னால் முடிந்தஅனைத்தையும் அமெரிக்க அரசாங்கத்துடன் சேர்ந்து செய்தான். 1993 ஜூலையில் அவன் ஒரு நியூயோர்க் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டான். அதில் அவன் இராணுவ கொலைகாரர்களுக்கு மன்னிப்பு வழங்கவும், ஜுண்டா ஆதரவு பாராளுமன்றத்தினால் ஏற்கக் கூடிய ஒரு அரசாங்கத்தை அமைக்கவும் வாக்குறுதி அளித்தான்.

இந்த நிலைமைக்கான புரட்சிகர பதிலீடு என்ன? ஹெயிட்டி, டொமினிக்கன் குடியரசு, கரிபியன், லத்தின் அமெரிக்காவில் உள்ள தொழிலாளர்கள், ஏழைகளை புரட்சிகரமான முறையில் அணிதிரட்டுவதே. ஒரு அனைத்துலகரீதியில் திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தின் ஒரு பாகமாக இப்பிராந்தியத்தினை சோசலிஸ்ட்ரீதியில் மறு அணிதிரட்டுவதன் மூலமே ஹெயிட்டிய மக்களின் துயரங்களுக்கு முடிவு கிட்டும், இது ஹெயிட்டியில் ஒரு புரட்சிக் கட்சியை வேண்டி நிற்கின்றது.

★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "சர்வதேச மூலதனத்தின் மேலாதிக்கத்தினால் உலகத் தொழிலாளர் வர்க்கம் ஒரே பிரச்சினையையே எதிர்கொள்கிறது"

## —இந்திய ட்ரொட்ஸ்கிஸ்ட் சுந்தரம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இந்திய தோழமை இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரான தோழர். சுந்தரம் சமீபத்தில் இலங்கை விஜயத்தை மேற்கொண்டார். அவர் மலையக பெருந்தோட்டங்களிலும் மற்றும் இடங்களிலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டங்களிலும். கலந்துரையாடல்களிலும் உரை நிகழ்த்தினார். சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியின் ஒரு அங்கமாக இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு பரந்த ட்ரொட்ஸ்கிசக் கட்சியை கட்டி எழுப்புவதற்கான பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகமாக அவரின் இலங்கை விஜயம் இடம்பெற்றது. தோழர். சுந்தரம் அட்டன், அப்புத்தளை, வெலிமடை, பசறை, பண்டாரவளை முதலான இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் உரை நிகழ்த்தினார். இக்கூட்டங்களில் 50 பெண் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட சுமார் 300 தொழிலாளர்கள் உத்சாகத்துடன் கலந்து கொண்டனர். தோழர். சுந்தரம் நிகழ்த்திய உரையின் சுருக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

ஆ-ர்

''கடந்த ஆகஸ்டில் நடந்து முடிந்த இலங்கைப் பொதுத் தேர்தலில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சர்வதேச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டது.

''இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் அணிதிரட்டும் பொருட்டு நான்காம்அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் பூண்டு செயல்படும் (இந்திய) சோசலிசத் தொழிலாளர் கழகத்தை இத்தேர்தல் பிரச்சாரங்களில் பங்குகொள்ளும்படி பு. க. க. அழைத்திருந்தது. சோ.தொ. க. தோழர்கள் உரிய காலத்தில் பாஸ்போர்ட் பெறமுடியாது போனதால் இப்பிரச்சார இயக்கத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும் சோ. தொ. க. தோழர் சுந்தரத்தை ஆகஸ்ட் 26ம் திகதி இங்கு அனுப்பி வைத்தது.''

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை தனித்துப் பிரிக்கும் பிற்போக்கு நிலைப்பாடுகளுக்கு தலையடி கொடுக்கும் விதத்தில் தனது பேச்சினை ஆரம்பிக்கையில் தோழர். சுந்தரம் கூறியதாவது: ''தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் ஏனைய பகுதி தொழிலாளர்களுடனும் இந்திய உப—கண்டத் தொழிலாளர்களுடனும் சர்வதேச தொழிலாளர்களுடனும் ஐக்கியப்பட்டாக வேண்டும். தோட்டத்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தனிப்பட்ட பிரச்சினை அல்ல. சர்வதேச மூலதனத்தின் மேலாதிக்கத்தின் காரணமாக உலகத் தொழிலாளர் வர்க்கம் இன்று அனுபவிக்கும் சகல கஷ்டங்களும் ஒரே பிரச்சினையையே எதிர்கொள்கின்றன. அவற்றுக்கு தீர்வு காண தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும், விவசாயிகளும் சர்வதேச ரீதியில் பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் ஐக்கியப்பட்டு, ஒரு சோசலிசப் புரட்சி மூலம் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.

''முதலாளித்துவ இலாப உற்பத்தி முறை இன்று பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. வீழ்ச்சி கண்டுவரும் இலாப வீதத்தினை தக்க வைக்க ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் (TNC) இந்தியா, இலங்கை போன்ற பின்தங்கியநாடுகளின் தொழிலாளர்களின் உழைப்பைக் குறைந்த விலைக்குச் சுரண்டுகின்றன. இந் நாடுகளின் அரசாங்கங்கள் இந்த ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு சேவை செய்வதன் மூலமே உயிர் வாழமுடியும் என்ற நிலையில் உள்ளன. இந்தியாவின் நரசிம்மராவ் அரசாங்கம் என்றாலும் சரி இலங்கையின் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கமும் சரி பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளின் அரசாங்கங்களும் சரி நிலைமை இதுதான்.

''இந்தியாவில் சுமார் 93 கோடி மக்கள்வாழ்கின்றனர். அதில் 30 கோடி மக்கள் தொழிலாளர்கள். இலங்கையின் முன்னைய யூ.என்.பி. அசாங்கமும் சரி இன்றைய சந்திரிகா அரசாங்கமும் சரி செயல்படுத்தி வரும் ''இந்த பொருளாதாரக் கொள்கை'' போன்றே இந்தியாவிலும் ''புதிய பொருளாதாரக் கொள்கை'' என்றபேரில் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களின் திட்டங்கள் அமுல் செய்யப்படுகின்றன. இதன்மூலம் அரசாங்க துறை நிறுவனங்கள் தனியாரிடம் தாரைவார்க்கப்படுகின்றன. அடுத்த வருடம் 1995—நரசிம்மராவ் அரசாங்கம் 2 கோடி தொழிலாளர்களையும் அரசாங்க ஊழியர்களையும் வீடுகளுக்கு அனுப்ப உள்ளது. ஏற்கனவே இந்தியாவில் 10 கோடிக்கும் அதிகமான வேலையற்றோர் இருக்கின்றனர்.''

அனைத்துலக ரீதியில் வர்க்கப் போராட்டம் கூர்மை கண்டு வருவதையும் சமூக வெடிப்பையும் பற்றிக் குறிப்பிடுகையில் தோழர் சுந்தரம் கூறியதாவது: ''வர்க்சப் போராட்டம் கூர்மை கண்டு சமூக வெடிப்பு இடம்பெறப் போவதை அறிந்த ஆளும் வர்க்கம், இன, மத, ஜாதி மோதுதல்களை தூண்டிவிட்டு வருகின்றது, ஆகஸ்ட் 15ம் திகதிய கொடியேற்ற நிகழ்ச்சியில் பேசிய நரசிம்மராவ் ''காஷ்மீர் பிரச்சினையை தீர்க்காமல் இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டது என கூற முடியாது'' என்றதும், அடுத்த 24 மணி நேரத்துக்குள் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸீர் பூட்டோ அதே தொனியில் பேசியதும் இந்து முஸ்லீம் எதிர்ப்பைத் தூண்டிவிட்டு, பாகிஸ்தானுடன் ஒரு யுத்தத்தை நடாத்துவதன் மூலம் இந்த முதலாளித்துவப் பாராளுமன்ற ஆட்சி முறைக்கு முடிவு கட்டி, இராணுவ ஆட்சியை திணிப்பதற்கான பேச்சாகும்.

''அவ்வாறே இன்றும் தேர்தல் முடிந்ததும் ஜனாதிபதி விஜேதுங்க இராணுவ அதிகாரிகளை அழைத்து இராணுவ சர்வாதிகார ஆட்சி முறைக்கு ஆதரவு கோரினார். அது சரி வராது போகவே சந்திரிகா குமாரதுங்கவை அரசாங்கம் அமைக்கும்படி அழைத்தார். இவை எல்லாம் தனிப்பட்ட நிகழ்வுகள் அல்ல. இன்று உலக சம்பூராவும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு இராணுவ, பாசிச சர்வாதிகார ஆட்சி தேவைப்படுகின்றது. அதன் மூலமே தொழிலாளர் வர்க்கத்தின் உபரிப் பெறுமானத்தை எந்த எதிர்ப்பும் இல்லாமல் சுரண்ட முடியும் என அவை நினைக்கின்றன.''

இன்றைய உலக நெருக்கடியில் வளர்ச்சி கண்ட முதலாளித்துவ நாடுகளும் தலைதப்பவில்லை என்பதைத் தெளிவுபடுத்திய சுந்தரம் கூறியதாவது: ''1950பதுகளில் உலக நாடுகளுக்கு கடன் வழங்கி வந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று உலகின் மிகப் பெரும் கடனாளி நாடாக உள்ளது. அமெரிக்காவில் தினமும் 3000 தொழிலாளர் வேலை இழக்கின்றனர். துவக்கப் பள்ளிகள் மூடப்படுகின்றன. கடந்த ஆண்டில் டெட்ரொய்ட் நகரின் மார்க் அவனியூவில் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஏழு குழந்தைகள் வீடு தீப்பிடித்ததால் இறந்தனர். அரசாங்கமும் முதலாளித்துவ பத்திரிகைகளும் பெற்றோரை குற்றவாளிகளாக்கியது. அமெரிக்க ட்ரொட்ஸ்சிச அமைப்பான வேர்க்கர்ஸ் லீக் நடாத்திய மக்கள் விசாரணை' மூலம் முன் அறிவிப்பு இல்லாமல் வீட்டு தண்ணீர் இணைப்பை துண்டித்ததால் 'பொய்லர்' வெடித்து வீடு தீப்பிடித்தது என்ற உண்மை அம்பலமாகியது. இச்சம்பவம் இடம்பெற்ற வேளையில் குழந்தைகளின் பெற்றோர் குப்பை மேட்டில் கழிவு இரும்பு, செம்பு உலோகங்களை பொறுக்குவதில் ஈடுபட்டிருந்தனர். இந்த வறுமையே குழந்தைகளின் மரணத்துக்கு காரணமாகியது என்ற உண்மையை 'மக்கள் விசாரணை' வெளியரங்குக்கு கொணர்ந்தது.

''இந்த நிலைமைக்கு முடிவு கட்ட தொழிலாளர் வர்க்கம் மத, இன, மொழி, ஜாதி, பிராந்திய எல்லைகளை கடந்து ஒரே வர்க்கமாக ஐக்கியப்படுவதும் இந்த இலாபவெறி அமைப்புக்கு சர்வதேச ரீதியாக சாவு மணி அடிப்பதும் அவசியம். அதன் மூலமே உயிர்வாழ முடியும். தொழிலாளர் வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுமிடத்து இன்று பெரும் அபிவிருத்தி கண்டுள்ள, விஞ்ஞான, தொழில் நுட்பங்களை முழுமையாக மனித நலனுக்கு பயன்படுத்தி திட்டமிட்ட சோசலிச உற்பத்தி முறையை கொணரவும் மனித இனம் முன்னேற்றம் காணவும் வழி கிட்டும்.'' என்றார்.

தோழர் சுந்தரத்தின் பேச்சைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் கேள்விகளை எழுப்பிய இளம் தொழிலாளர்களுக்கு அவர் பதிலளித்துப் பேசினார். 'இந்தியாவில் தொழிலாளர்களின் நிலைமை என்ன?'' ''தொழிற்சங்கத்தில் இருந்து விடுபட்டு என்ன செய்வது''? ''பாண் விலையை குறைத்தது போல் சந்திரிகா அரசாங்கம் மற்ற பொருட்களின் விலைகளையும் குறைக்குமா?, எனக் கேட்டனர்.

''பாணின் விலை குறைப்பு மிகவும் தற்காலிகமானது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்குகளை திரட்டவும், வெகுவிரைவில் தொழிலாளர்வர்க்கம், ஒடுக்கப்படும் மக்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கான ஒரு முன்னேற்பாடே இவை. பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த இரண்டு வார காலத்தினுள் கொழும்புசுதந்திர வர்த்தக வலய' தொழி

( 7-ஆம் பக்கம் பார்க்க )



தோட்டத் தொழிலாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ள தோழர். சுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமானின் புதிய குத்துக்கரணம்: தோட்டத் தொழிலாளர்களுக்கு புதிய ஆபத்தை உருவாக்கும்

கடந்த 17 ஆண்டுகளாக முதலாளித்துவ யூ. என். பி. அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கும் மற்றும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக மிலேச்சத் தாக்குதல் நடாத்தத் துணை போன எஸ். தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா தலைவர்கள் இப்போது ஆட்சிக்கு வந்துள்ள முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு அளிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

செப்டம்பர் 10ம் திகதி அட்டனில் கூடிய இ.தொ.கா தேசிய சபை, தம்மால் உடன்பாட்டுக்கு வரக்கூடிய பிரச்சினைகளில் அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கவும், ''இ. தொ. காவின் எதிர்கால பயணப் பாதை''யை பற்றி முடிவு செய்யவும் அதிகாரத்தினை தமக்கு வழங்கியுள்ளதாயும் தொண்டமான் அறிவித்துள்ளார். கூட்டத்துக்குச் செல்வதற்கு முன்னதாக தொண்டமான் இன்றைய அரசாங்கத்தின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்தவுடனும் அரசியலமைப்புச் சட்ட அமைச்சர் ஜீ. எல். பீரிசுடனும் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

கடந்த ஞாயிறு வார இதழ்களில் வெளியான செய்தியின் படி பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவுடன் இடம்பெற்ற சதியின் பின்னர் தொண்டமானை (பொதுஜன முன்னணி) தேசியப் பட்டியல் உறுப்பினராகவும் அமைச்சராகவும் நியமனம் செய்ய இடமிருப்பதாகத் தெரிய வந்தது. இதே சமயம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் காமினி திசாநாயக்க இ. தொ.கா.வின் ஆதரவை தமக்கு வென்றெடுக்கத் துடிக்கின்றார்.

தமது அமைப்பின் மோசமான நெருக்கடிக்கு மத்தியிலும் இ.தொ.கா, தலைவர் தோட்டத் தொழிலாளர்களை ஏலம்போடவும், பலியிடவும் புதிய எதிர்ப் புரட்சி விளையாட்டில் இறங்கியுள்ளார்.

செப்டம்பர் 18ம் திகதிய ஞாயிறு 'திவயின' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ''நாட்டின் வாழ்வுக்கு உறுதியான ஒரு அரசாங்கம் அவசியப்படுவதால் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டும்'' என இ.தொ.கா. தலைவர் தெரிவித்துள்ளார். கடந்த 17 ஆண்டுகளாக ''உறுதியான அரசாங்கத்தை'' உருவாக்க தொண்டமான் யூ. என். பி.க்கு ஆதரவளித்தார்.

தம்மையும் உள்ளடக்கிய அந்த அரசாங்கம் பொதுஜன வெறுப்புக்கு உள்ளான நிலைமையில் குத்துக்கரணம் அடிக்க ஆரம்பித்துள்ள தொண்டமான் இப்போது பொதுஜன முன்னணிக்கு 'உறுதியான அரசாங்கம்' அமைக்க ஆதரவளிக்கப் போகின்றார். அன்று தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்கும்—சிறப்பாக தோட்டத் தொழிலாளர்களுக்கும் தாக்குதல் நடாத்த யூ. என். பி. அரசாங்கத்துக்கு 'உறுதிப்பாட்டை' வழங்கிய தொண்டமான் இப்போது அதை மீண்டும் ஒரு தடவை அரங்கேற்றும் பொருட்டு குமாரதுங்க அரசாங்கத்தை 'உறுதிப்படுத்த' தயாராகின்றார்.

இந்தப் பிற்போக்கு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் பொருட்டு தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களதும் மற்றும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களதும் கண்களில் மண்ணைப் போடும் இயக்கத்தினை ஆரம்பித்து வைத்துள்ளார். இன்றைய முதலாளித்துவ அரசாங்கம் ''தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண நிஜமான முயற்சி செய்வதாக'' கூறிக் கொள்ளும் தொண்டமான், தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஏராளம் செய்யவுள்ளது என்ற பிரச்சாரத்தையும் கட்டவிழ்த்து விட்டுள்ளார். தோட்டத் தொழிலாளர்களின் 300 நாள் வேலை நாள் பற்றிய கோரிக்கையை அரசாங்கம் கவனத்துக்கு எடுக்குமா என்ற 'சன்டே லீடர்' பத்திரிகையின் கேள்விக்கு அவர் பின்வருமாறு பதில் அளித்துள்ளார்.

''இதைப் பற்றி என்னால் இப்போதைக்கு ஒன்றும் கூற முடியாது. ஆனால் இந்தக் கோரிக்கைக்கும் மேலாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் வழங்க முடியும் என என்னால் கூற முடியும். உதாரணமாக சகல வேலையற்ற இளைஞர்களுக்கும் ரூபா 1500/- வழங்குவதாக அது யோசனை தெரிவித்துள்ளது. இதில் தோட்டத்துறையும் அடங்கும். அப்படியென்றால் ஏன் சம்பள உயர்வு கோர வேண்டும்! இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவோ அல்லது கோரிக்கை சமர்ப்பிக்கவோ அவசியம் என நான் நினைத்துப் பார்க்கவும் இல்லை. எவ்வாறெனினும் நாம் பொறுமை சாதிக்க வேண்டும். பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் உள்ள அனைத்தும் அமுல் செய்யப்படின் நாம் சந்தோசப்படுவோம்'' (செப்டம்பர் 18)

அவ்வாறு இல்லாது போயின் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் எனத் தெரிவித்த தொண்டமான்—அது வேலைநிறுத்தத்தையோ அல்லது பிரச்சார இயக்கத்தையோ குறிக்காது என்றுள்ளார். பொதுஜன முன்னணி அரசாங்கம் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து ஜனநாயகத்துக்கு வழி திறந்து விடும் எனவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் எனவும் இ. தொ. கா. தவறான கதைகளில் ஈடுபட்டு வருகிறது. இதன்மூலம் தோட்டத் தொழிலாளர்களையும் பொதுவில் முழுத் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களையும் அரசாங்கம் தயார் செய்து வரும் தாக்குதல்களுக்கு பலியிட முயற்சிக்கிறது. இதை நடைமுறைக்கிட இ. தொ. கா. மற்றும் துரோக அமைப்புக்களுடன் சேர்ந்து முழுப்பலமும் கொண்டு செயற்படும் என்பதை தொண்டமான் காட்டிக் கொண்டுள்ளார்.

கே. ரத்நாயக்க

குமாரதுங்க அரசாங்கம் விடுதலைப் புலிகள் அமைப்புடன் சமரசத்துக்கு குறிபார்ப்பது ஜனநாயகத்தை ஊர்ஜிதம் செய்வதற்கா? ஒரு போதும் இல்லை. இருபுறத்திலும் உள்ள முதலாளிகள் ஒன்றிணைந்து தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்குத் தாக்குதல் தொடுப்பதன் மூலம் ஏகாதிபத்திய கம்பனிகளின் சுரண்டல் நலன்களை பூர்த்தி செய்து வைக்கத் துடிக்கின்றனர். இதில் தொண்டமானுக்கு யூ. என். பி. அரசாங்கம் என்றாலும் சரி குமாரதுங்க அரசாங்கம் என்றாலும் சரி பரவாயில்லை. முதலாளித்துவ அரசை பலப்படுத்தி தமது முதலாளித்துவ வயிற்றுமாரி நலன்களை பூர்த்தி செய்து கொண்டால் இ. தொ .கா. தலைவர்களுக்கு அதுவே போதுமானது.

## கடந்த 17 வருடங்கள்

தாம் பிரதிநிதித்துவம் செய்து கொண்டுள்ளதாக மோசடியான முறையில் கூறிக் கொண்டுள்ள ''இந்திய வம்சாவளியினர்''— முக்கியமாகத் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 17 ஆண்டுகளாக கொடிய தாக்குதலுக்கு ஆட்பட்டது தொண்டமான் அமைச்சர் பதவி வகித்த யூ. என். பி. அரசாங்கத்திடமே. பயங்கரவாத லேபலை ஒட்டுவதன் மூலம் அரச ஒடுக்குமுறை உள்ளடங்கலான இனவாத அடக்கு முறைகளுக்கு தோட்டத் தொழிலாளர்கள் உள்ளாகினர். அந்த அரச பயங்கரங்களின் இலக்கு தொழிலாளர்களின் தொழில் வாழ்க்கைத்தரம், ஜனநாயக உரிமைகளை கொடிய தாக்குதலுக்கு உள்ளாக்கி சுரண்டலை உக்கிரமாக்குவதே.

தோட்டங்களை தனியார் மயமாக்குவது யூ. என். பி. அரசாங்கத்தின் முதல் நடவடிக்கையாக இருந்தது. இருப்பினும் தொழிலாளர்களின் எதிர்ப்புக் கிளம்பும் என்ற அச்சத்தினால் அது பிற்போடப்பட்டு வந்தது. தனியார் மயமாக்கத்தின் ஆரம்ப நடவடிக்கையாக. இ. தொ.கா, தலைவர்களின் அங்கீகாரத்துடன் 1989ல் தோட்ட நிர்வாகம் தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டது, இதன் மூலம் தொழிலாளர்களுக்கு பிரமாண்டமான நன்மைகள் கிட்டப் போவதாக தொண்டமான் கூறியிருந்தார். ஆனால் தொழிலாளர்கள் வேலை துரிதப்படுத்தல், சம்பள வெட்டு, தண்டனை வழங்கல், ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல் போன்ற மிலேச்ச தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. தொழிலாளர்களின் எதிர்ப்பினை நசுக்கும் பொருட்டு தொண்டமான்—செல்லச்சாமி தலைமை ஒரு புறத்தில் செயற்பட்டது. மறு புறத்தில் ஏனைய தோட்டத் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து திணித்த ''தோட்டத் தொழிற்சங்க கூட்டு கமிட்டி' அரசாங்கத்தைப் பற்றிய பொய் விமர்சனங்களில் ஈடுபடுவதன் மூலம் தொழிலாளர் எதிர்ப்பினை கரைத்துவிட முயன்றது. 1993 அளவில் தனியார் கம்பனிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான உடன்படிக்கை முற்றுப் பெற்றது. இ.தொ.கா.வும் இந்த தொழிற்சங்க முன்னணியும் இன்றுள்ள கம்பனிகளைப் போன்ற ''திறமையற்ற''கம்பனிகளிடம் தோட்டங்களை ஒப்படைக்காமல் அனைத்துலக ரீதியில் ரெண்டர் கோரி தோட்டங்களை நடாத்தக் கூடிய பெரும் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றன.

இன்று ஆட்சிக்கு வந்துள்ள முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கம் எதிர்காலத்தில் அதையே செய்யப் போகின்றது. அத்தோடு முன்னர் ஒருபோதும் இல்லாத அளவிலான தாக்குதலை தோட்டத் தொழிலாளர் மேல் திணிக்கவும் உள்ளது. கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்க அறிக்கையைப் பற்றி 1994 ஜுலை 31ம் திகதி 'சன்டே டைம்ஸ்' பத்திரிகையில் பிரசுரமான ஒரு கட்டுரை இதற்கு நல்ல எடுத்துக்காட்டு:

''நிலம், உழைப்பு, மூலதனத்தினை பயனுள்ள முறையில் பயன்படுத்துதல்'' என்ற பகுதியில் அது ஊழியச் செலவு உற்பத்திச் செலவின் நூற்றுக்கு 60 வீதமாகும் என்கின்றது. மேல்நாடுகளில் உழைப்பின் பெருமளவிலான விநியோகமும் கீழ்நாடுகளில் உழைப்பின் தட்டுப்பாடும் மலைநாட்டில் குறைந்த உழைப்புத் திறன் நிலைமையும் தடையாக உள்ளது.

''நிறைவேற்று ஜனாதிபதி அரசியலமைப்பு தமிழ் தோட்ட சனத்தொகையினரை தீர்க்கமான பேரம் பேசும் அதிகாரம் கொண்ட சிறுபான்மை இனக்குழுவாக ஆக்கிய ஒரு நிலைமையிலேயே புதிய தேசிய தேர்தல் மூலோபாயத்தின் எழுச்சிக்கு வழிவகுத்தது. இந்த விதத்தில் தோட்டத் தொழிலாளர்கள் 1984, 1988 கடந்த 1993ல் சம்பள உயர்வைப் பெற்றதோடு ஆண்டுக்கு 300நாள் வேலை நாள் இன்னுமொரு கோரிக்கையாக உள்ளது. 1989ல் தென் இந்தியாவில் ஒரு தொழிலாளியின் கொழுந்து பறிக்கும் வேகம் ஹெக்டேயருக்கு 25 கி. கிராமாக இருந்தது. எமது உயர்ந்த இடங்களில் அது 14 22 கி. கிராமாக கீழ் மட்டத்தில் உள்ளது; பதிந்த இடங்களில் அது 24.54கி. கி. உள்ளது.''



எஸ். தொண்டமான்

இந்த முதலாளித்துவ அறிக்கை கூறுவது என்ன? தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகள் சிதறடிக்கப்பட வேண்டும். இலட்சக் கணக்கில் தொழிலாளர் வேலைநீக்கம் செய்யப்பட வேண்டும். மோசமான உழைப்புச் சுரண்டலுக்கு தோட்டத் தொழிலாளர்கள் பலியாக்கப்பட வேண்டும் என்பதே. எந்தவொரு முதலாளித்துவ அரசாங்கமும் கொண்டுள்ள திட்டம் அதுவே. ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களை தழுவிக்கும் பொருட்டு இ. தொ.கா.வும் மற்றும் தொழிற்சங்கங்களும் நடாத்தி வரும் பிரச்சாரம் உண்மையில் இந்த மிலேச்சத் தாக்குதலுக்கு தொழிலாளர்களைப் பலியிடும் பிரச்சாரமாகும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சலுகைகள் எனப்படுபவை பற்றி தொழிற்சங்கத் தலைவர்கள் நடாத்தி வரும் கதையளப்புக்களின் பின்னணியில் தொழிற்சங்கத் தலைவர்களதும்

( 7-ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவிபெக் பிரிவினைவாதம்: தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு பொறிக் கிடங்கு

கீத் மீடோகுராப்ட்



குவிபெக் தேர்தலில் மொன்றீல் தீவின் தொழிலாளர் வர்க்க தேர்தல் தொகுதியில தனது வேட்பாளரை நிறுத்துவதில் கனடிய ட்ரொட்ஸ்கிச இயக்கமான இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் கட்சி (IWP, வெற்றிகண்டுள்ளது. இக்கட்டுரை கட்சி வேட்பாளரும், தேசியச் செயலாளருமான கீத் ஜோன்ஸ் எழுதிய கட்டுரையில் இருந்து ஆக்கப்பட்டது.

செப்டம்பர் 12ம் திகதிய குவிபெக் தேர்தலுக்கு இன்னும் இரண்டு கிழமைகள் எஞ்சியிருக்கையில்நடாத்தப்பட்ட கருத்துக்கணிப்பு வாக்குக்கள் குவிபெக் பிரிவினை கட்சி (Separatist Parti Quebecois) மாகாணப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை வென்றெடுக்கவும் ஒன்பது வருடகால லிபரல் ஆட்சிக்கு முடிவு கட்டவும் சாதகமாக அமைந்துள்ளது.

பிரிவினைக்கட்சியின் வெற்றியானது 127 வருடகால பழமைவாய்ந்த கனடிய தேசிய அரசினை பிரச்சினைக்குள் மாட்டி வட அமெரிக்காவில் யூகோசலாவிய பாணியிலான ஒரு உள்நாட்டு யுத்தத்தினை தோற்றுவிக்கும் ஆபத்தினை உருவாக்கியுள்ளது.

கனடாவின் பிரான்சிய மொழி பேசும் பெரும்பான்மையினரைக் கொண்ட ஒரே மாகாணத்தைப் பிரிக்கச் சபதம் செய்துள்ள பெரும் வர்த்தக நிறுவனங்களின் ஒரு கட்சியான பிரிவினைக் கட்சி (PQ), ஆட்சிக்கு வந்த ஒரு வருட காலத்தினுள் பிரிவினை மீது ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பினை ஏற்பாடு செய்ய வாக்குறுதியளித்துள்ளது.

ஒரு புதிய அரசினை நிறுவுவது ஒரு பூரணத்துவமான உண்மையாக இருப்பதால் பெரும்பான்மையினரான குவிபெக் வாசிகள் பிரிவினைக்கு ஆதரவளிப்பர் என பிரிவினைவாதிகள் கூறுகின்றனர். இதே வேளையில் குவிபெக்கின் பிரிவினையானது 600 பில்லியன் டாலர் கனடியன் சமஷ்டிக் கடன், குவிபெக் எல்லைகள், சிறுபான்மையினர் பராமரிப்பு, சென்ட் லோரன்ஸ் கடல் வழிக்கான உரித்து, வளைகுடா மீன்பிடி மற்றும் இயற்கை வளங்களுக்கான நீண்ட பேரம் பேசல்களை உரித்தாக்கிவிடும் என இவர்களின் முதலாளித்துவ எதிரிகள் எச்சரிக்கின்றனர்.

குவிபெக் பிரிவினை— 27மில்லியன் கனடிய வாசிகளில் 7 மில்லியன் மக்களின் வசிப்பிடம்-கனடாவின் பொருளாதார வெளியீட்டை ஏறக்குறைய காற்பங்கினால் குறைப்பதோடு கனடிய முதலாளி வர்க்கம் சென்றடையக் கூடிய உலகளாவிய எல்லைகளையும் தடுக்கின்றது. அத்தோடு இது கனடிய சமஷ்டி அரசின் உள்ளேயான சமபல நிலையையும் பிரமாண்டமான முறையில் மாற்றியமைக்கிறது.

கிழக்கு, மேற்கு கரைகளில் உள்ள மாகாணங்களின் பிரதமர்கள், கனடாவின் பெரும் நிலப்பரப்பில் இருந்து குவிபெக் பிரிந்து செல்லுமானால் தமது மாகாணங்கள் ஒன்றில் அமெரிக்காவுடன் இணைந்து கொள்வதைப் பற்றியோ அல்லது தமது சொந்த பிரிவினை அரசுகளை அமைப்பது பற்றியோ யோசிக்க வேண்டிவரும் என ஏற்கனவே தெரிவித்துள்ளனர்.

பிரிந்து செல்வதற்கானகுவிபெக்கின் எந்தவொரு முயற்சியும் பிராந்திய அடிப்படையிலான அரை டசின் முதலாளித்துவக் கன்னைகளிடையே ஒரு கசப்பானதும், இரத்தம் தோய்ந்ததுமான ஒரு போராட்டத்துக்கு இட்டுச் செல்லும்.

## கனடாவும் தேசிய அரச முறையின் நெருக்கடியும்

சுதந்திர குவிபெக் அரசுக்காக வக்காலத்து வாங்கும் ஒருபெரும் அரசியல் இயக்கம் 1960பதுகளிலேயே தலைநீட்டியது. அதன் தோற்றத்தின் முதல் இரு தசாப்த காலங்களில் குவிபெக் கட்சி சுதந்திரத்துக்கு அல்லது இறைமைக்கான தனது கோரிக்கையை கனடாவின் ஏனைய பாகங்களுடன் ஒரு புதிய கூட்டுக்கான அழைப்புடன் சேர்த்துக் கொண்டது. கனடிய சமஷ்டி அரசின் நெருக்கடி இனக்குழு, மொழிவாரி குரோதங்களில் அன்றி உலகப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியின்- குறிப்பாக உற்பத்தியின் பூகோளமயமாக்கம் தேசிய அரசுகளின் மீது கொணர்ந்த பிரமாண்டமான தாக்கங்களில் வேரூன்றியிருந்தது. இருப்பினும் முதலாளி வர்க்கத்தின் வேறுபட்ட குழுக்களும் அத்தகைய குரோதங்களை உற்பத்தி செய்யவும் சுரண்டவும் முயன்று வந்தன.

உலகம் ஒரு பொருளாதார அலகாக இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து முதலாளிகளுக்கு இடையே இலாபங்களையும் சந்தைகளையும் இயற்கை வளங்களையும், உழைப்பு தடாகத்தையும் சுரண்டும் போராட்டம் கையாலாகாத்தனமானதாயும் உக்கிரமானதாயும் மாறியது.

பெரும் ஏகாதிபத்திய வல்லரசுகள் — அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி— உலக மேலாதிக்கத்துக்காக வர்த்தக, இராணுவ மோதுதலில் குதிக்கத் தள்ளப்பட்டுள்ளன. இவை இந்நூற்றாண்டில் இடம்பெற்றதைக் காட்டிலும் இரட்டிப்பானதாகும். பலவீனமான ஏகாதிபத்தியச் சக்திகள் உலகளாவிய மேலாதிக்கத்தின் அபிலாசைகளின் கனிஷ்ட பங்காளிப் பாத்திரத்தினை ஏற்பதன் மூலம் உலகச் சந்தையில் ஒரு இடத்தைப் பிடித்துக் கொள்ளலாம் என நம்புகின்றன. இந்தக் கூட்டுக்களின் நிபந்தனைகள் பெரும் அரசியல், பொருளாதார சலுகைகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளதன் காரணமாக ஆளும் வர்க்கங்களுக்கு இடையே கசப்பான மோதல்களை உண்டு பண்ணியுள்ளது.

கனடாவைப் போலவே இத்தாலி, பிரித்தானியா, பெல்ஜியம் முதலான நாடுகளிலும் இந்தப் பிணக்குகள் பிராந்திய அல்லது பிரிவினைவாத இயக்கங்களாக வளர்ச்சி கண்டுள்ளன. அவை தனியான கொடுக்கல் வாங்கல்களுக்கு முதலாளி வர்க்கத்தின் தனியான கன்னையை கோரி வருகின்றன. சிறுபான்மை மக்களின் சுயநிர்ணயம் என்ற பேரில் முதலாளி வர்க்கத்தின் பிராந்தியக் கன்னைகள் இடைநடுத் தரகர்கள் இல்லாமல் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுடன் தமது சொந்தக் கொடுக்கல் வாங்கல்களை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றன. கனடாவில் இந்தப் போக்குக்கள் சிறப்பாகக் குறிப்பிடப்படுவதற்குக் காரணம் அந்தளவுக்கு அமெரிக்க பொருளாதாரத்துடன் கனடியப் பொருளாதாரம் இறுகிப் போய் இருப்பதே.

கனடாவின் வேறுபட்ட பகுதிகள் அமெரிக்கப் பொருளாதாரத்துடன் பல்வேறுபட்ட வழிகளிலும் பிணைக்கப்பட்டுள்ளன. பலம் வாய்ந்த பிராந்திய அடிப்படையிலான முதலாளித்துவக் கன்னைகள் முரண்பட்ட நலன்களை அபிவிருத்தி செய்து கொண்டுள்ளன. அமெரிக்காவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினுள் (FTA) நுழைந்து கொண்டமை கனடிய முதலாளி வர்க்கத்தின் உள்ளே உக்கிரமான போராட்டத்துக்குக் களம் அமைத்துக் கொடுப்பதாய் முடிந்தது. உருவாகி வரும் கண்டரீதியான பொருளாதாரத்தில் செல்வம் ஈட்டுவது யார் சிதைந்து போவது யார் என்பதாக இப்போராட்டம் உள்ளது.

குவிபெக் கட்சி(Qp), ரெனி லெவ்ஸ்கியூவின் தலைமையில் குவிபெக் லிபரல் கட்சியில் இருந்து வெளியேறிய ஒரு கன்னை, இரண்டு சிறிய பிரிவினைக் கட்சிகளுடன் சேர்ந்து 1962ல் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் ஒன்று வலதுசாரி 'சோசல் கிரெடிட் இயக்கத்தில் வேரூன்றியது. மற்றையது சோசலிஸ்ட் எனக் கூறிக்கொண்டது.

பிரிவினைவாதம் ஒரு பெரும் அரசியல் இயக்கமாகத் தோன்றியமையானது இருபெரும் சமூக, அரசியல் மாற்றங்களுடன் பிணைக்கப்பட்டிருந்தது: இரண்டாம் உலக யுத்தத்தின போதும் 1950பதுகளின் போதும் பெருமளவிலான அமெரிக்க முதலீட்டின் பெருக்கெடுப்பும் நவீன கல்வி முறையினாலும், நலன்புரி அரசினாலும் அரச துறையின் வளர்ச்சியும்.

அமெரிக்க மூலதனம் குவிபெக்கினுள் ஊடுருவியமை ஒரு முரண்பட்ட தாக்கத்தினைக் கொண்டிருந்தது. ஒருபுறத்தில் குவிபெக்கின் பெரும் வர்த்தக நிறுவனங்கள் தாம் அமெரிக்க ஏகபோகங்களுடன் திடீரென போட்டிபோட நேரிட்டுள்ளதை கண்டன. மறுபுறத்தில் வோல் ஸ்ரீட்டுடனான உறவுகளின் வளர்ச்சி குவிபெக் கம்பனிகளுக்கு டொரான்டோ வங்கிகளுக்கும், முதலீட்டு நிறுவனங்களுக்கும் மூலதன பதிலீட்டு மார்க்கத்தை வழங்கின. குவிபெக் முதலாளிவர்க்கத்தின் சிலபகுதியினர் வளர்ச்சி கண்டுவரும் மாகாண அரசினை வோல் ஸ்ரீட்டுடன் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு நெம்புகோல் அந்தஸ்தினை அடைவதற்கான சாதனமாக நோக்கினர். சில குட்டி முதலாளித்துவப் பகுதியினர் இவர்களுடன் சேர்ந்து கொண்டனர். ஆங்கில அறிவுக்குறைவு காரணமாக இவர்களுக்கு அமெரிக்க கூட்டுக் கம்பனிகளில் நிர்வாகப் பதவிகள் கிடைத்தன. பிரான்சிய மொழி பேசும் தொழில்சார் நிபுணர்களை சேவைக்கு அமர்த்துவதை உறுதி செய்ய பிரான்சிய மொழிக்கு விசேட சட்ட அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என இவர்கள் கோரினர்.

பிரிவினைவாத முதலாளித்துவ வேலைத்திட்டமும் அவர்களின் சுயநல இலக்குகளும் குவிபெக்கியர்களை ''எமது சொந்த வீட்டின் எஜமானர்கள்'' ஆக்கும் தீவிரவாத கூச்சல்களால் சுற்றிக்கட்டப்பட்டது. ஆனால் தொழிலாளர் வர்க்கத்தின் உள்ளே பிரிவினைவாதிகள் ஒருகணிசமான செல்வாக்கினைப் பெற முடிந்திருப்பின் அதற்குக் காரணம்தொழிலாளர் அதிகாரத்துவங்களின் துரோகமே காரணமாகும். 1960பதுகளும் 1970பதுகளின் முற்பகுதியும் குவிபெக் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னொருபோதும் இல்லாத எழுச்சியைக் கண்டது. ஆங்கில சோவினிசத்தின் முன்னால் அடிபணிந்து போன தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் புதிய ஜனநாயகக் கட்சியும் இந்த இயக்கத்தைக் கண்டு அஞ்சின. குவிபெக் தொழிற்சங்கத் தலைவர்கள் குவிபெக் கட்சியை முதலாளித்துவ ஆட்சிக்கு, எதிரான சவாலில் இருந்து தொழிலாளர் வர்க்க கிளர்ச்சியை திசைதிருப்பவும் கனடிய, அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்திலிருந்து திசைதிருப்பும் ஒரு அரசியல் பாதுகாப்பு வால்வாக கண்டனர்.

1976 நவம்பரில் குவிபெக் கட்சி முதலாவதாக தெரிவு செய்யப்பட்டதும் உலக முதலாளித்துவம் ஒரு குறுகிய காலத்துக்கு பொருளாதார வளர்ச்சி கண்டது. ஆனால் 1980பதுகளின் ஆரம்பத்தில் அது பொருளாதார வீழ்ச்சியின் கோரப் பிடிக்கு ஆளானதும் குவிபெக் கட்சி சமூக செலவினங்களை வெட்டியதோடு அரசாங்க துறை தொழிலாளர் சம்பளங்களை வெட்டியது. 1970பதுகளில் குவிபெக் கட்சியானது ஒரு தீவிரவாத தொழிலாளர் வர்க்கத்தினை தீண்டும் முதலாளித்துவ ஆட்சியின் ஒரு அரசியல் ஆயுதமாக சேவை செய்தது. இன்று அது சுதந்திர குவிபெக் அரசே வர்த்தக யுத்தத்தினையும் வர்க்க யுத்தத்தினையும் தட்டி எழுப்புவதற்கான சிறந்த மேடையாகும் என குவிபெக் முதலாளிகளை நம்பவைக்க முயற்சிக்கின்றது.

1960பதாம் 1970பதாம் ஆண்டுகளில் ஸ்டாலினிஸ்டுகளும் திரிபுவாத குழுக்களும் குவிபெக் தேசியவாதத்தினை முன்னெடுப்பதிலும், சட்டரீதியான தாக்குவதிலும் தலைமைப் பாத்திரம் வகித்தனர். சோசலிசத்துக்கான போராட்டம் கைவிடப்பட்டமை குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளை குவிபெக் தேசியவாதத்துக்கு ஆதரவளிக்க இட்டுச்சென்றது. அன்று திரிபுவாத ஏர்ணஸ்ட் மண்டேலின் ஐக்கிய செயலகத்தின் பகுதியாக விளங்கிய லீக் போர் சோசலிஸ்ட் அக்சன் (League for Socialist Action)னால் இது அப்பட்டமாக ருசுப்படுத்தப்பட்டது இதுசோவினிச மொழிச் சட்டங்களுக்கு ஆதரவு கொடுத்ததை நியாயப்படுத்தியது. இன்று இவை குவிபெக் கட்சியையிட்டு வெறும் வாயளவிலான விமர்சனங்களை செய்து கொண்டபோதிலும் ஒரு சுதந்திர முதலாளித்துவ குவிபெக்கை அமைப்பதற்கு ஆதரவளிக்க உறுதிபூண்டுள்ளன.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் இன்டர்நஷனல் தொழிலாளர் கட்சியும் (IWP) மட்டுமே குவிபெக், கனடிய தேசியவாதங்களை பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் எதிர்த்து நிற்கின்றன.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமானின் புதிய குத்துக்கரணம்...

( 5-ஆம் பக்கத் தொடர்ச்சி )

சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவ சமசமாஜ, இ.தொ.கா. தலைவர்களதும் முண்டுடன் 'உறுதியான அரசாங்கத்தை' சிருஷ்டித்துக் கொண்டு தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் தொடுப்பது அத்தகைய ஒரு மிலேச்சத் தாக்குதலேயாகும்,

குமாரதுங்க அரசாங்கம் 'உறுதிப்பாட்டை' உருவாக்கிக் கொண்டு வர்த்தக யுத்தத்தின் வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த உள்ளது. பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் தமது உரிமைகளின் பேரில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது துப்பார்க்கிப் பிரயோகம் செய்ய பொலிசாரை ஈடுபடுத்தியதன் மூலம் இதனை ஏற்கனவே வெளிக்காட்டிக் கொண்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் ''யூ என். பி.க்கு வாக்களித்தனர்' என்ற குற்றச்சாட்டின் பேரில் பொதுஜன முன்னணியின் குண்டர்கள் பல்வேறு இடங்களிலும் இனவாதக் கூச்சல்களில் ஈடுபட்டுள்ளதோடு, மாத்தளை 'பிரே' தோட்டத்தில் இடம்பெற்ற தாக்குதல் மூலம் இடம்பெறப் போகும் தாக்குதல் பற்றி ஏற்கனவே எச்சரித்துள்ளனர்.

தொண்டமான் படுமோசமான நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளார். இதனாலேயே இந்த எதிர்ப்புரட்சி அரசியல் குத்துக்கரணங்களில் குதித்துள்ளார். கடந்த 17 ஆண்டுகளில் இடம்பெற்ற தாக்குதல்களுக்கு எதிராகத் திரும்பத் திரும்ப எதிர்ப்புப் போராட்டங்களில் இறங்க முயற்சித்த தோட்டத்தொழிலாளர்களிடையே தொண்டமான் மற்றும் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் சம்பந்தமாக சுடும் வெறுப்பு உருவாகியுள்ளது. தொண்டமானின் கைக்கூலியாக விளங்கிய பீ. சந்திரசேகரன் அவரில் இருந்து விலகி மலையக மக்கள் முன்னணியை அமைத்ததற்குக் காரணம் இந்த தொழிலாளர் எதிர்ப்பினை வேறு ஒரு பிற்போக்கு வழியில் தள்ளிவிடுவதற்கே. அவர் காதர் என்ற பழைய மாஓவாத கைக்கூலியுடன் சேர்ந்து தோட்டத் தொழிலாளர்கள் தனியான ஒரு தேசியஇனம் எனக் கூறிக்கொண்டு ஏனைய தொழிலாளர் வர்க்கப் பிரிவினரிடமிருந்து தோட்டத் தொழிலாளர்களை பிரிந்துப் போடும் மற்றுமோர் இனவாத அரசியலில் ஈடுபட்டார். இப்போது பீ. சந்திரசேகரன் இன்றைய முதலாளித்துவ அரசாங்கத்தின் பிரதி அமைச்சர். இவர் தனது அமைச்சர் அதிகாரத்தைப் பாவித்து தொழிலாளர்களிடையே பொய் எதிர்பார்ப்புக்களைசிருஷ்டிப்பதன் மூலம் தனது ஆளுமையை மேலும் சிதறுண்டு போகச் செய்து விடுவாரோ எனத் தொண்டமான் அஞ்சுகிறார்.

## இ.தொ.கா நெருக்கடி

1992ல் இ.தொ.கா.விலிருந்து பிளவுண்டு சென்ற இன்னொரு கோஷ்டி இராமையா என்ற பழைய இ.தொ.கா, வயிற்றுமாரியின் உதவியுடன் ஒரு தொழிற்சங்கத்தை அமைத்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் சேர்ந்து கொண்டது. இவர் இ. தொ. கா. தொழிலாளர்களிடையே அபிவிருத்தி கண்டு வந்த கிளர்ச்சியை சூறையாடிக் கொண்டார். தொண்டமானும் செல்லச்சாமியும் நீண்டகால காட்டிக் கொடுப்புக்களின் பின்னர் கடந்த ஆண்டின் இறுதியில் நாய்ச் சண்டையில் ஈடுபட்டனர். அது தொழிலாளர்களை மீண்டும் பிளவுபடுத்தி, முதலாளித்துவ சலுகைகளை பங்குபோடும் தேவையினால் ஏற்பட்டது.

இன்று தோட்டத் தொழிலாளர்கள் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் இ. தொ.கா.வில் இருந்து வெளியேறி வருகின்றனர். 10 ஆண்டுகளுக்கு முன்னர் தொண்டமான் தம்மிடம் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளதாக வாயடித்து வந்தார். அத்தோடு 10 இலட்சம் தோட்ட தொழிலாளர்களை தாம் நிர்வகிப்பதாகவும் கூறி வந்துள்ளார். ஆனால் இன்றோ இ. தொ. கா. உறுப்பினர் எண்ணிக்கை இரண்டு இலட்சத்துக்கும் சற்று அதிகமாக உள்ளது.

எனினும் இந்தச் சங்கம் கடந்த 17 ஆண்டுகளுள் வேறு நபர்களுடன் பிடுங்குப்பட்டது. யாருடன்? முதலாளித்துவ அரசின் சலுகைகளை சுரண்டும், தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சிக்குடிக்கும் அதிகாரத்துவத்துடன் பிடுங்கப்பட்டது. இவர்கள் ஊழல்களிலும் மோசடிகளிலும் புதைந்து போயுள்ளனர். ஏனைய தொழிற்சங்கங்களைப் போலவே இ. தொ.கா.வும் தொழிலாளர்களின் குறைந்த பட்சக் கோரிக்கைகளுக்காகவும் எதுவிதத்திலும் தொடர்ந்து போராடும் ஒரு அமைப்பு அல்ல. தொழிலாளர்களை பலியிடுவதற்கு தமது முழுப்பலத்தையும் செலவிடும் ஒரு எதிர்ப்புரட்சித் தலைமையினைக் கொண்ட பொறிக்கிடங்காக அது மாறியுள்ளது.

இ,தொ,கா.வின் அரசியல் குத்துக் கரணம் சிறப்பாகத் தோட்டத் தொழிலாளர்களிற்கும், பொதுவில் முழுத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒரு பேராபத்தினை தோற்றுவித்துள்ளது. இலாப வெறிபிடித்து அலையும் வெளிநாட்டு ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் கொடூரமான சுரண்டலுக்கு தொழிலாளர்களின் ஒரு பகுதியினரை இலக்காக்கவும் ஏனையோரை வெளியேற்றவும் இடம்பெற்றுவரும் மிலேச்ச தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க அவர்கள் தயாராக வேண்டும். இந்தத் திட்டங்கள் இ. தொ.கா. உட்பட்ட அமைப்புக்களின் தோளின் மேலாகவே வளர்ச்சி காண்கின்றன, ஏகாதிபத்தியவாதிகளுடனும் இலங்கை முதலாளிகளுடனும் கைகோர்த்துக் கொண்டுள்ள தொழிற்சங்கங்களால் இப்போது தொழிலாளர்களுக்கு கிட்டக் கூடிய வாய்ப்பு இது மட்டுமே. ஒரு சங்கத்தில் இருந்து இன்னொன்றுக்கு மாறுவதன் மூலமோ அல்லது அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுக்கும் வேலைத்திட்டத்தினுள் சிறைப்பட்டு கிடப்பதன் மூலமோ தொழிலாளர்கள் தம் முன்னால் உள்ள ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்க முடியாது.

இலங்கையின் ஏனைய தொழிலாளர்களுடனும் அனைத்துலகத் தொழிலாளர்களுடனும் தமது கூட்டினை உறுதி செய்வதன் மூலம் சோசலிச வேலைத்திட்டத்திற்குப் போராடுவதே தோட்டத் தொழிலாளர்கள் முன்னுள்ள ஒரே பாதையாகும். சகல தோட்டங்களிலும் தொழிலாளர் பிரதிநிதிகளைக் கொண்ட நடவடிக்கைக் குழுக்களை அமைப்பதன் மூலம் இந்த வேலைத்திட்டத்தில் ஈடுபடுமாறு நாம் தோட்டத் தொழிலாளர்களை வேண்டுகின்றோம். அதற்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு தலைமை வழங்க புரட்சிக் கட்சி அவசியம். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே அக் கட்சி

★

## சர்வதேச மூலதனத்தின் மேலாதிக்க..

( 4-ஆம் பக்கத் தொடர்ச்சி )

லாளர்கள் நடாத்திய ஊர்வலத்தின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எட்டு தொழிலாளர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் தொழிலாளர் வர்க்கத்தின் நிலைமை இதைவிட மேம்பட்டது எனக் கூறிவிட முடியாது. கடந்த 40 ஆண்டுகளாக இந்தியாவில் கட்டியெழுப்பப்பட்ட கைத்தொழில் துறை ஏகாதிபத்திய கட்டளையின் பேரில் அழிக்கப்பட்டு வருகின்றது. இந்தியா பூராவும் ஏழை மக்கள் கோடிக்கணக்கில் சேரிகளில் வாழ்கின்றனர். மருத்துவ மனைகளில் மருந்து கிடையாது. இந்த ஆண்டு தமிழ் நாடு ஜெயலலிதா அரசாங்கம்5000 துவக்கப் பள்ளிகளை மூடியுள்ளது. கல்வி என்பது ஒரு வியாபார பண்டமாகி விட்டது. வீடில்லாப் பிரச்சினை பூதாகாரமானதாக உள்ளது. உலக வங்கி கட்டளைப்படி அண்மையில் மின்சார கட்டண மானியம் வெட்டப்பட்டது. இதனால் சிறு விவசாயிகளுக்கு இதுவரை கிடைத்துவந்த சலுகைக் கட்டண மின்சாரம் வெட்டப்படவுள்ளது. விவசாய உரம், விதைக்கு வழங்கப்பட்ட உதவி மானியம் வெட்டப்படும் நிலையில் விவசாயம் பெரும் பாதிப்புக்குள்ளாகும். சிறு விவசாயிகள் அழிக்கப்படுவர். நரசிம்மராவ் அரசாங்கம் விவசாயத்தை ஒரு தொழிலாக மாற்ற சட்டம் கொண்டு வந்துள்ளது. ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்கள் விவசாய துறையில் பாரிய அளவில் முதலீடு செய்யும்''

இந்த தொழில், வாழ்க்கைத்தர வெட்டுக்கு எதிராக அகில இந்தியாவிலும் வெடித்துள்ள போராட்டங்களுக்கு எதிரான நரசிம்மராவ் அரசாங்கத்தின் பொலிஸ் வேட்டையின் கொடூரத்தை தொழிலாளர்களுக்கு தெளிவுபடுத்துகையில் சுந்தரம் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''தமிழ் நாட்டில் மதுராதுணி ஆலை, கரூர் சர்க்கரை ஆலை, நெய்வேலி நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் மீது துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. நெய்வேலி சுரங்கத் தொழிலாளர் ஒரு கிலோ மீட்டர் துரத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர். மேற்கு வங்காளத்தில் வேலை நிறுத்தத்தில்ஈடுபட்ட சணல் ஆலை தொழிலாளர் மீது CPI(M) ஸ்டாலினிச ஜோதிபாசு அரசாங்கம் இத்தகைய தாக்குதலையே மேற்கொண்டது. தமிழ் நாட்டின் பொலிஸ் நிலையங்களில் என்றும் இல்லாத அளவில் கொலைகளும், கற்பழிப்புக்களும் அதிகரித்துள்ளன. ஒரு அறிக்கையின்படி கடந்த 7 மாதத்தில் மட்டும் இந்திய பொலிஸ் நிலையங்களில் 200 கொலைகள் நடந்துள்ளன.''

தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் துரோகங்களை எடை போடுகையில் தோழர் சுந்தரம் 1990களில் இ.தொ.கா. தோட்ட தனியார் மயத்துக்கு ஆதரவாக நடாத்திய பொய்ப் பிரச்சார நடவடிக்கைகளுக்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் 1988ல் வெளியிட்ட ''தோட்டத் தொழிலாளர்களை காப்பாற்று'' என்ற பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டவை இன்று ருசுவாகியுள்ளதாகக் குறிப்பிட்டார். தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் உலகக் கட்சியின் இலங்கைப் பகுதியாகச் செயல்படும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வழிகாட்டுதலின் கீழ் அமைக்கப்படும் நடவடிக்கை குழுக்களில் சேர்ந்து கம்பனி நிர்வாகங்களின் தாக்குதலை எதிர்த்துப் போராட வேண்டும். தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் பிடியில் இருந்து விடுபட்டு, இந்த முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி வீசும் சோசலிசப் புரட்சிக்காக தயார் செய்யும் படி தோழர் சுந்தரம் அழைப்பு விடுத்தார்.

★

## மாத்தளை—கம்மடுவ...

( 3-ஆம் பக்கத் தொடர்ச்சி )

யும் ஒருவர் சுகவீனமுற்றுள்ளதால் அவரைத் தூக்கிவர ஆண்கள் வெளியே வரவேண்டுமென்றும் அழைத்தனர்.

இந்த கதையை கேட்டு சந்தேகம் கொண்ட தங்கவேல் ( 40 வயது ) ஈஸ்வரன் (16) இருவரும் பங்களாவிலிருந்தும் களவாக வெளியேறி தமது லயன்களுக்கு ஓடி குண்டர் தோட்டத்தினுள் நுழைந்துள்ளதால் பெண்கள் குழந்தைகள்வயோதிபர் யாவரும் உடனடியாக காட்டுக்குள் ஓடிப்பதுங்கிக் கொள்ளுமாறு அறிவித்தனர். இவர்கள் பங்களாவிற்கு திரும்பும் போது பங்களாவிலுள்ள சகலரும் — லட்சுமி (50) மாரிமுத்து (55) ஆனந்தம்மா (50) கார்மேகம் (52) லோகேஸ்வரி (5) சிவஞானம் (13) என்பவர்கள் கைகளும் வாய்களும் கட்டப்பட்டு வைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். தங்கவேலுவும் ஈஸ்வரனும் இவர்களை விடுவித்து காட்டுக்குள் ஓடுமாறு கூறி விட்டு லயன்களுக்கு விரைந்தனர்.

அச்சமயம் லயன்களுக்குள் நுழைந்த குண்டர்கள் சாமான்களை தூக்கி வீசியும் சுவர்களை உடைத்தும் ''தமிழா வெளியேறு தங்கியிருந்தால் கொல்லுவோம்'' என்று மகத்தினார்கள். ஒருவன் தங்கவேலுவை கைத்துப்பாக்கியால் சுட்டான். குண்டு தலையை சிராய்த்தபடி சென்றதால் வெளிக்காயம் ஏற்பட்டது. தங்கவேலுவும் ஈஸ்வரனும் உயிரை காக்க ஓடிச் சென்று உறவினருடன் சேர்ந்து கொண்டனர். அப்போது அதிகாலை 2 மணியிருக்கும்.

தோட்டத்துக்குள் பாய்ந்த குண்டர்கள் அனைவரும் தேர்தலின் போது மொன்டிகோபல்லாபவுக்கு ஆதரவாக வேலை செய்த பொதுசன முன்னணி ஆட்களென்றும் அவர்களுள் ஒருவர் தாம் நன்கு அறிந்த டிகிரிபண்டா என்றும் தொழிலாளர் தெரிவித்தனர்.

தோட்டத் தொழிலாளர் மீதான இத்தகைய தாக்குதல்கள் புதிய அரசாங்கம் பதவிக்குவந்ததுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்றதாக தகவல்கள் வந்துள்ளன. இவை வெறுமனே தேர்தல் கால வன்செயல்களல்ல. யூ. என். பி அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு பல்வேறு தாக்குதல்களை தோட்டங்களை தனியார்மயமாக்கல் வேலைத்திட்டங்களினூடாகத் தொடக்கிவைத்தது. அத்தாக்குதல்களை பூரணத்துவம் செய்ய யூ. என். பிக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதுவிட்ட குறையை தொடர்ந்து முடிக்க முதலாளித்துவ பொதுசன முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் மீதான இத்தாக்குதல்கள் அரசாங்கம் பாசிச தாக்குதல்களை கட்டவிழ்க்க தயாராயுள்ளதைக் காட்டுகிறது. தொழிலாளர்கள் தொண்டமான், சந்திரசேகரன் உட்பட்ட முதலாளித்துவ தலைமைகளை நிராகரிப்பதும் தொழிலாளர் சக்தியை ஒருங்கிணைந்து இத்தாக்குதலை முறியடிக்க சுயாதீனமாக முன்வருவதும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பியகம சு. வ. வ பொலிஸ்...

( 1-ஆம் பக்கத் தொடர்ச்சி )

வெளியிட்ட மத்திய வங்கி ஊழியர் சங்கம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது; ''பியகம வர்த்தக வலய தொழிலாளர்களுக்கு தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல் எதிர்காலத்தில் முகம் கொடுக்க நேரிடும் நிலைமை எத்தகையது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது அதற்கு முகம் கொடுக்க சுயாதீன தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்துடனும் சக்திகளுடனும் ஒன்றிணைந்து தொழிற்பட மத்திய வங்கி ஊழியர் சங்கம் விரும்புகின்றது.''

அன்சல் லங்கா, சு.வ.வ. மற்றும் பக்டரிகளின் தொழிலாளர்களும், டாக்டர்கள், தாதிகள் போன்றோரும் சுயாதீன தொழிலாளர் விசாரணைக்கு ஆதரவு காட்டியுள்ளனர்,

இரண்டு மாத காலமாக பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவிட்டு இறுதியில் அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு விடயத்தை தெளிவுபடுத்த 'சு.வ.வ. நடவடிக்கை குழு' வினால் ஒழுங்கு செய்யப்பட்ட செப்டம்பர் 5ம் திகதி 'சமாதான நடைபவனி'யில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே பியகம தொழிலாளர்கள் மேல் இந்த பொலிஸ் தாக்குதல் இடம் பெற்றது.

துப்பாக்கிகள், கண்ணீர்ப் புகை, கேடயங்கள் சகிதம் ஆயுதபாணிகளாக நின்ற பொலிஸ் கோஷ்டி சியம்பலாபே — சபுஸ்கந்தவுக்கு இடையேயான பெருந்தெருவில் ஊர்வலத்தினை எதிர்கொண்டதோடு எதுவித மான எச்சரிக்கையும் இல்லாமல் துப்பாக்கிப் பிரயோகத்திலும் கண்ணீர்ப் புகை அடியிலும் இறங்கியது. இதனால் கே. பிரேமரத்ன என்ற தொழிலாளி உயிராபத்தான காயத்துக்கு உள்ளானார். அன்சல் லங்கா தொழிலாளியும் 35 வயதுமான கே. பிரேமரத்ன தற்சமயம் கொழும்பு பெரியாஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார், அவரது தலையை துழைத்த மூன்று துப்பாக்கி ரவைகளுள் இரண்டு அகற்றப்பட்டுள்ள போதிலும் மூன்றாவது ரவையை சத்திரசிகிச்சை மூலம் அகற்றுவது உயிராபத்தானது என டாக்டர்கள் கூறியுள்ளனர்.

பிரேமரத்தினவின் சகோதரரான தர்மசிரி 'தொழிலாளர் பாதை' நிருபருடன் பேசுகையில் பிரேமரத்ன 'சில தருணங்களில் கண்விழித்துப் பார்த்தபோதிலும் அவருக்கு எதைப்பற்றியும் நினைவுவருவதாய் இல்லை. நோயாளி திரும்பவும் பழைய நிலைக்குத் திரும்ப முடியும் எனச் சொல்ல முடியாது என டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.'

பூகொடையைச் சேர்ந்த கிரிஷாந்தியின் தலையைத் துழைத்த தோட்டா சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது. களனியில் வசிக்கும் வசந்தியின் கையை துழைத்த தோட்டாவினால் இரண்டு கைவிரல்கள் உயிரற்றுப் போயுள்ளன. இவை எல்லாம் பொலிஸ் தாக்குதலின் பயங்கரத் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன.

அன்சல் லங்கா கம்பனியின் 38 தொழிலாளர்களுக்கும் செரமிக் நிறுவனத்தின் ஒரு தொழிலாளிக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருவதோடு இந்த பொலிஸ் தாக்குதலுக்கு முன்னோடியாக இன்னும் பல தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர், பொலிஸ் தாக்குதலைத் தொடர்ந்து ஒரு இளம் பெண் தொழிலாளி உட்பட 10பேர் கைது செய்யப்பட்டனர். இந்தத் தொழிலாளர் வேட்டையும் சுயாதீன தொழிலாளர் விசாரணைக்குள் அடங்குகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்க பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தை மூடி மறைப்பதில் அரசாங்கத்தின் பங்காளிகளான சம சமாஜ—ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிகளும், நவசம சமாஜக் கட்சி, பாசிச ஜே. வீ. பி.யும் இவற்றின் பத்திரிகைகளும் ஈடுபட்டுள்ளன. தொழிற் சங்கங்களும் முதலாளித்துவ வெகுஜன தொடர்புச் சாதனங்களும் சு. வ. வ. தொழிலாளர்களுக்கு எதிரான ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபன உரிமையாளர்களுடனும் அரசாங்கத்துடனும் சதிகாரக் கூட்டில் ஈடுபட்டுள்ளன.

சம சமாஜக் கட்சியும் அதன் தலைவரும் தொழில் நுட்ப, விஞ்ஞான அமைச்சருமான பேர்னாட் சொய்சாவும் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி முழு மௌனம் சாதிப்பதன் மூலம் அதற்குப் பூரண ஆதரவை வழங்கியுள்ளனர். துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் வெளியான கம்யூனிஸ்ட் கட்சியின் செப்டம்பர் 10ம் திகதிய 'அத்த' பத்திரிகை இத்தகைய ஒரு தாக்குதல் இடம்பெற்றதாகத் தன்னும் குறிப்பிடவில்லை. மாறாக ஸ்டாலினிச இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் தூதுக்குழுவொன்று தொழில் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து 'ஊழியர் பிரச்சினை' பற்றி கலந்துரையாடியதாக குறிப்பிட்டது.

## ஜே.வீ.பி செயற்பாடு

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் ஸ்டாலினிஸ்டுகளின் தோளின் மீதாக சு. வ. வ. தொழிலாளர்களிடையே ஊடுருவியுள்ள ஜே. வீ.பி. கும்பல் ஒன்று 'சமாதான நடை பவனி'க்கு தடை கிடையாது எனவும் 'இப்போது அவசரகாலச் சட்டம் இல்லை. அனுமதி எடுக்கத் தேவையில்லை என்றெல்லாம் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் சியம்பலாபேயில் நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர்களிடம் கூறியதாக செரமிக் நிறுவனத்தின் தொழிலாளர்கள் 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் தெரிவித்தனர். ஸ்டாலினிச ஆதரவு 'நடவடிக்கை குழு' அன்சல் லங்கா நிறுவனம் 83 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யவும் 50 வீத சம்பள உயர்வு கோரிக்கையை குப்பைக் கூடைக்குள் வீசவும் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு இடமளித்தது. இதற்குப் பதிலாக அரசாங்க பிணக்குத் தீர்ப்பாளருக்கு 'பிரச்சினையை' விட்டு வைத்தது.

'இன்றைய ஆட்சியின் பிரதான இலக்கு வெளிநாட்டு முதலீடுகளை தருவிப்பது' ஆகும் என குறிப்பிட்டுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் சந்திரிகா குமாரதுங்க தொழிலாளர் வர்க்கம் தலையெடுக்காதிருப்பதை உறுதி செய்ய முயன்றுள்ளது இதற்கு இராணுவம்—பொலிஸ் மட்டுமன்றி மத்தியதர வர்க்க கும்பல்களை பாசிச சக்திகளாக கட்டவிழ்த்து விடவுப் தயாராக உள்ளது. தொழிலாளர்களிடையே ஊடுருவுவதன் மூலம் அவர்களை தமது கைத்தேங்காயாகப் பயன்படுத்த முயலும் ஜே. வீ.பி. அத்தகைய ஒரு பாசிச அமைப்பாகும்.

இலாப வீதத்தினை காக்கும் பொருட்டு பூகோள ரீதியில் பரந்துபட்டுள்ள ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள்தொழிலாளர்களை மிலேச்சமான முறையில் சுரண்டித் தள்ள சகல உரிமைகளையும் துடைத்துக் காட்டும்படி வேண்டிக் கொண்டுள்ளன. இன்று வெளிநாட்டு முதலீடுகளை தருவிக்கும் இலங்கை முதலாளிகள் முகம் கொடுக்கும் பிரச்சினை இதுவே. உலகளாவிய ரீதியில் இந்த ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டலுக்கு முகம் கொடுக்கும் தொழிலாளர்கள் அனைத்துலக ரீதியில் ஐக்கியப்பட்டு ஏகாதிபத்தியத்தினை தூக்கி வீசி, உலக சோசலிசத்தை அமைக்கப் போராடுவதைத் தவிர வேறு வேலைத்திட்டம் கிடையாது. தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்துடன் கூடிய நடவடிக்கைக் குழுக்களை அமைத்து தொழிலாளர்களை பாதுகாக்கவும், உரிமைகளை வென்றெடுக்கவும் அணிதிரள வேண்டும் என பு.க.க. வேண்டுகின்றது. பியகம சு. வ. வ. தொழிலாளர்களுக்கு எதிரான துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய சுயாதீன தொழிலாளர் விசாரணை இப்போராட்டத்தின் நடுமையமாக விளங்கும்.

---

## அட்டன் தேயிலைத் தோட்டச் செய்திகள்

### நோர்வூட் — லெட்சுமி தோட்டம்

நோர்வூட் லெட்சுமி தோட்டத்தின் ஐந்து டிவிசன்களின் 2500 தொழிலாளர்கள் 23 கோரிக்கைகள் முன்வைத்து செப்டம்பர் 5—21 வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். ★ தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி ★ வளர்ந்த குழந்தைகளை வேலைக்குப் பதிதல் ★ இலவச மாவு விநியோகம் ★ ஊ. சே. நிதி, ஊ. ந. நி. பணங்களை திருப்பி வழங்குதல் ★ லைன் அறைகளை திருத்துதல் என்பன முக்கிய கோரிக்கைகளாக விளங்கின. பிரச்சினையைத் தீர்ப்பதில் நிர்வாகம் காட்டிய அசமந்தப் போக்கினால் வெறுப்படைந்த சுமார் 1500 பெண் தொழிலாளர்கள் மூன்று தோட்ட உதவி சுப்பிரன்டன்டுகளை குழந்தைகள் மடுவத்தில் மறியல் செய்தனர். தோட்ட முகாமையாளர் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ள வேண்டும் என இவர்கள் வலியுறுத்தினர். மடுல்சீமை பிளான்டேசன் லிமிட்டட்டுக்கு சொந்தமான இத்தோட்டத்தில் பழைய மலை தேயிலை கொய்தல் 12 கி. கி. இருந்து 14 கி. கி. ஆகவும் புதியமலை தேயிலை கொய்வு 14 கி. கி. இருந்து 16 கி. கி. ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 1992ல் இக்கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் இன்னும் தீர்வு இல்லை.

---

### ஸ்ரத்டன் தோட்டம்

## இயந்திரத்தில் நசுங்குண்டு தொழிலாளி மரணம்

ஸ்ரத்டன் தோட்டத்தின் செம்பகவத்த டிவிசனைச் சேர்ந்த ஆலமுத்து மாடசாமி என்ற 22 வயது தொழிலாளி செப்டம்பர் 21ம் திகதி 50 அந்தர் இயந்திரத்தினுள்நசுங்கி மரணமானார். சீயந்து தொழிலாளியாகத் தொழில் புரிந்து வந்த இவர் ஒரு செயின் புளக் இயந்திரத்தினை புரட்டி எடுக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்ட சமயத்தில் இயந்திரம் சரிந்து அதனுள் நசுங்கியதாக தெரிகிறது நிர்வாகம் இந்த மரணத்துக்கான பொறுப்பை மெக்கானிக்கின் தலையில் சுமத்திவிட முயன்றுள்ள அதே வேளையில் தொழிற் சங்கத் தலைவர்கள் இம்மரணம் சம்பந்தமாகவோ அல்லது தொழில் நிலைமைகள் சம்பந்தமாகவோ சுயாதீனமான தொழிலாளர் விசாரணை நடாத்துவதாக இல்லை. இத்தோட்டம் லங்கம் நிறுவனத்துக்குச் சொந்தமான வட்டவளை பிளான்டேசனைச் சேர்ந்தது.

---

## இந்தியாவில் கொள்ளை நோய் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பட்ட குளிசை ரூபா 100/க்கும் அதற்கு மேலாகவும் விலை போனதாக தெரிகிறது. சுராத் நகரில் இருந்து உயிர்தப்பி ஓடிய இலட்சக் கணக்கானவர்களிடம் தனிப்பட்ட பஸ் சொந்தக்காரர்கள் இரண்டு, மூன்று மடங்கு கட்டணம் அறவிட்டுள்ளார்கள்.

உலக சுகாதார அமைப்பின் புதுடில்லி அமைப்பின் இயக்குனர் ''எதிர்வரும் சில தினங்களில் நோய் கட்டுப்பாட்டுக்குள் வரும்'' என்ற இலட்சணத்தில் மக்களின் கண்களுக்கு மண் அறையும் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டுள்ளார். நரசிம்மராவ் அரசாங்க நிறுவனங்கள் விடுக்கும் அறிக்கைகளும் இந்தப் பாணியிலேயே அமைந்துள்ளன. அப்படித்தான் இது தற்காலிகமாக கட்டுப்பாட்டுக்குள் வரினும் இந்தியாவினுள் சகல தொற்று நோய்களும் பரவுவதற்கான நிலைமைகள் இருந்து கொண்டுள்ளது.

ஆனால் 1960களில் கட்டுப்பாட்டுக்குள் கொணரப்பட்டதாகக் கருதப்பட்ட கொள்ளை நோய் மீண்டும் தலை உயர்த்தியது எப்படி? இதுதான் பிரச்சினை.

'ஹிந்து' பத்திரிகையில் சிறப்பு நிருபர் ஒருவர் எழுதிய கட்டுரையில் ''பொதுஜன சுகாதார நிலைமையும் அவ்வாறே பொது வசதிகளும் சரிந்து போனதால் இந்த தொற்று நோய் ஏற்பட்டுள்ளதாக'' குறிப்பிட்டுள்ளார். ''வெள்ளப் பிரளயங்களின் பின்னர் சௌக்கிய நடவடிக்கைகள் சுராத் நகர சபையால் புறக்கணிக்கப்பட்டமை கொலைகாரத் தனமானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது'' என இக்கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய முதலாளி வர்க்கம் தமது தேசியவாத பொருளாதார வேலைத்திட்டங்கள் வங்குரோத்தடைந்ததும் படிப்படியாக சுகாதார சேவை உட்பட்ட சமூக நலன்புரி சேவைகளை வெட்டத்தொடங்குகிறார்கள். 'திறந்த பொருளாதாரக் கொள்கை' யின் கீழ் வெளிநாட்டு ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களை அழைப்பதற்கான நிலைமையைச் சிருஷ்டிக்க மக்களின் உயிர் உடைமைகளை நாசமாக்குவது நரசிம்மராவ் அரசாங்கம் உட்பட்ட ஆட்சியாளர்களுக்கு அவசியமாகியுள்ளது. சுராத்தில் கொள்ளை நோய் பலியெடுப்பு இதற்கு நல்ல எடுத்துக் காட்டு.

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org